தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஐப்பசி 21 (7-11-'59). சனிக்கிழமை | இதழ் 21

— முன் இதழ்த் தொடர்ச்சி —

புத்த சமண சமயப் பண்புகளும் தமிழினப் பண்பும் உண்மையில் அடிப்படையில் ஒரே இனப் பண்புகள்தான்—அதுவே தென்கிழக்காசியாவின் அடிப்படைப் பண்பும் ஆகும். இந்தியா முழுவதும் இடைக்காலத்தில் இதற்கெதிரான பண்பு பரவிப் புத்த சமண சமயத் தடங்களை—சிறப்பாக, சாதிமுறையும் புரோகித முறையும் எதிர்த்த புத்தசமயத் தடங்களை அழித்தாலும், இவ்வழிவுப் பண்புகள் தமிழகம் கடந்து தென்கிழக்காசியா செல்லாமல் தமிழகம் தடுத்து நிறுத்தியுள்ளது. தாய்மொழி இலக்கியங்களும் வடமேற்கிலிருந்து தெற்கு-கிழக்காகச் செல்லுந்தோறும் தென்கிழக்காசியாவில் வளம்பெறக் காண்கிறோம். சிறப்பாக வரலாறு இல்லாத இந்தியாவுக்கு இலங்கை மகாவம்சோ முதலிய வரலாற்றேடுகளின் ஒளி வழங்குவதைக் காண்கிறோம்.

புத்த சமயப் பண்புக்கும் தமிழ்ப் பண்புக்கும் உள்ள மற்றொரு தொடர்பையும் தமிழிலக்கியமே காட்டுகிறது. தமிழ் ஏடுகள் திருக்குறளும் சங்க இலக்கியமும் போன்ற சமயச்சார்பற்ற ஏடுகளாயிருந்தாலும் சரி—மணிமேகலை போன்ற புத்த ஏடாகவோ, சிந்தாமணி போன்ற சமண ஏடாகவோ, வேறு சைவ, வைணவ, கிறித்தவ, இஸ்லாமிய ஏடாகவோ இருந்தாலும் சரி—அவற்றின் சமயப் பண்புகளினூடாகவே நாம் ஒரு பொதுத் தமிழ்ப் பண்பைக் காண்கிறோம். திருக்குறளின் பகுத்தறிவுக் கருத்துக்களையும் பண்பார்ந்த மரபுகளையும் அவை எல்லாவற்றிலும் ஒப்பக் காணலாம். சமயத்துறையில் கூட, மணிமேகலையின் புத்தர் வணக்கப் பாடல்களையும் திருவாசகத்தையும், திருவாய்மொழியையும் அருகருகே வைத்துப் பார்ப்பவர், அவை ஒன்றனை ஒன்று தழுவி வளர்ந்தவை என்பதைக் காணுமலிருக்க முடியாது. இந்தியாவெங்கும் கோயில்களில் முணுமுணுக்கப்படும் சமஸ்கிருத மந்திரங்கள் உண்மையில் திருவாசக, திருவாய்மொழி மூலமாக உருமாறி வந்த மணிமேகலையின் புத்த பாசுரங்களின் எதிரொலிகள் தாமோ என்று எண்ண இடமுண்டு.

இலங்கை வரலாறு எழுதியவர்களில் பலரும் இலங்கை வாழ் தமிழரும்சரி, சிங்களவரும் சரி இரு சாரருமே இந்தியா என்ற பரப்பிலிருந்து வந்த வடவர் மரபினரும் தென்னவர் மரபினருமேயாவர் என்று குறிப்பிட்டுள்ளனர். புத்த சமயம் சார்ந்த பலரும் புத்தர்பிரான் மீதுள்ள பாசத்தின் காரணமாக இதை வாளா ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் இரு இனத்தவருமே முற்றிலும் இலங்கை வாசிகளே யாவர் என்பதை அமைந்து ஆராய்பவர் காண்டல் அரிதன்று. அணிமைக் காலத்தில் இந்தியாவின் இந்தோ ஆரிய மொழிக்குழுவில் ஒன்றாகச் சிங்கள மொழியைச் சேர்த்துக்கொள்ளும் பாங்கு வளர்ந்துள்ளது. ஆங்கிலக் களஞ்சியம் அதை இந்தோ ஆரிய மொழிகளில் ஒன்றாகவே காட்டவும் துணிந்துள்ளது. ஆனால் தமிழையும் தமிழின மொழிகளையும் இடையே உயிருடன் விட்டு விட்டு எப்படி ஆரியம் இலங்கையை மட்டும் கௌவிற்று என்பதை அவர்கள் விளக்க முயலவில்லை. விசயனுடன் புத்தசமயமும் ஆரிய இனமும் மொழியும் அப்படியே இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன எனறு வரலாற்றறிஞர் கூட எப்படியோ நம்பமுடிகிறது.

இலங்கைப் பழங்குடிகள் வேடர்கள் என்றும், அவர்களில் ஒரு சாரார்தான் நாகர் என்றும் இலங்கைப் பழமையாய்வாளர் வரைந்துள்ளனர். 'வேடர்' வேட்டையாடியவர் என்றும், 'நாகர்' பாம்பு வணங்கியவர்கள் என்றும் அவர்கள் கூறுவதிலிருந்தே வேடர், நாகர் மொழிசாரா இடுகுறிப்பெயர்களல்ல; தமிழ்ப் பொருளுடைய தமிழ்ச் சொற்கள் என்பது பெறப்படுகிறது. இதே வேடரினம் தென்னகத்தில 'வில்லி'கள் என்ற பெயருடனும், கூர்ச்சரம் பகுதியில் 'பீலி' மொழி பேசும் 'பிலி'கள் என்ற பெயருளும், காணப்படுகின்றனர். 'வில்லி' என்பதும் தமிழ்ப் பெயரே. சங்க காலத்து 'வல்வில் ஓரி' இவ் வில்லி மரபினனே என்றும் ஆய்வாளர் ஆய்ந்து சொல்கின்றனர். நாகர்களோ பண்டைத் தென்னகத் தமிழகத்திலும் வடஇந்தியாவிலும் அசாமிலும் பசிபிக் தீவுகளிலும் பரநது காணப்படுபவர். புத்தர்பிரானே நாக மரபில் பிறந்தவர் என்றும், தென்கிழக்காசியாவெங்கும் நாகமரபார் இருந்ததாலேயே அவர் நெறி எங்கும் விரைந்து பரந்ததென்றும் '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' என்ற அரிய ஆராய்ச்சிநூல் கண்ட ஈழத்தறிஞர் கனகசபை குறித்துள்ளார். 'நாகர்' என்ற பெயரடிப்படையாகத் தென்னகமெங்கும் நாகர் கோவில், நாகபட்டிணம், நாகநாதபுரம் முதலிய பன்னூற்றுக்கணக்கான ஊர்ப்பெயர்களும், நாகன், நாகப்பன், இளநாகன் முதலிய ஆட்பெயர், புலவர் பெயர்களும் தொன்றுதொட்டு இன்றளவும் உள்ளன.

நாகரில் சிங்கநாகர் முதலிய பல கிளை மரபுகள் பற்றித் தமிழ்க் கல்வெட்டுக்களில் கேள்வியுறுகிறோம். ஈழத்துச் சிங்களவரும் பர்மியரும் பெரிதும் இம்மரபினராகவே இருத்தல் கூடுமென்று எண்ணஇடமுண்டு.

நாகர், வேடர், வில்லிகள், திரையர், அருவர், குறும்பர், சளுக்கர், கடம்பர், பாணர், இரட்டர் முதலிய எத்தனையோ கிளையினங்களையும் குடிமரபுகளையும்பற்றி நாம் தென்னக வரலாற்றில் கேள்வியுறுகிறோம். இவர்களுள் திரையரே மேலையுலகெங்கும் பரவிய திராவிட மரபினர் என்பர் திருத்தந்தை ஹீராஸ். இவர்களில் பலர் இன்று நாம் தமிழர் என்றோ தமிழினத்தார் அல்லது திராவிடர் என்று கூறும் மரபினரே என்பதில் ஐயமில்லை. நாகர் போன்ற இனங்களும் தமிழர் அல்லது தமிழினத்தவரே என்றுதான் கூற இடமுண்டு. ஆனால் தமிழருக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பை முற்றிலும் சரிவரப் புரிந்துகொள்ளமுடியாமல் அவர்களைப்பற்றிப் புராணக் கூற்றுக் கூறும் நம்பிக்கைகளும் தடைகளாகவுள்ளன இவையன்றித் தமிழர் நேரடிக் கூற்றுக்களும் அவர்கள் தமிழரா, அல்லவா என்று இருவழியும் துணியக்கூடா நிலையினவாகவே அமைகின்றன.

கடைசியில் குறிப்பிட்ட நிலைக்கு ஒரு காரணம் உண்டு. இன்று தமிழ் பேசுபவரை மட்டுமே நாம் தமிழர் என்கிறோம். தமிழின மொழி பேசுபவரைத் தமிழர் என்றல் தமிழினத்தவர் அல்லது திராவிடர் என்கிறோம். தமிழினத்தவர் பிற இன மொழி பேசினுற்கூட அறிஞர் அவர்களைத் திராவிடர் என்று குறிக்கின்றனர். ஆனால் பண்டைத் தமிழர் தமிழ் மொழி பேசியவர்கள் அனைவரையும் தமிழர் என்று அழைக்க விரும்பியதாகத் தெரியவில்லை. தமிழ்ப் பண்பையும் தமிழ்ச் செம்மையையும் உரையாணியாகக்கொண்டு, இரண்டும் உடையவர்களையே தமிழர் என்றனர். நாகர் போன்ற இனத்தவர் தமிழ் பேசினுலும் பேசாவிட்டாலும் அவர்களைத் தமிழர் படர்க்கையில் வைத்தோதிய தன் காரணம் இதுவே.

பண்டைத் தமிழனிடம் உள்ள இந்த ஒரு பண்பு-ஒரு குறை என்று கூடச் சொல்லலாம்-இன்று உலகில் பலரைத் தமிழரல்லாதவராக, தமிழினத்துக்கே அயலாராகக்கூடக் கருதப்படச் செய்துவிட்டது என்னலாம். தமிழர் மீது ஆதிக்கம் செலுத்துபவர் தமிழரிடையே உயர்வு பாராட்டிப் பிரித்து வருவதுபோல, பிற தென்கிழக்காசிய இனங்களிலும் உயர்வு தாழ்வு கற்பித்தும், தாய்மொழி மீது வேறு மொழிகளைத் தெய்வ மொழிகள், தெய்வ இன மொழிகளாக்கிச் சுமத்தியும் வந்துள்ளனர்; வருகின்றனர். அத்துடன தமிழரும் பிற தென்கிழக்காசிய மக்களும் மோதிவிட்டு முதலில் தமிழரையும் பின் அவர்கள் இன உறவுடைய பிற தாய் மொழியினரையும் நலிவிக்க அரும்பாடு படுகின்றனர்.

— 11-ம் பக்கம் —

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்.

எல்லைக்கோடாகவும் இன்பக்களஞ்சியமாகவும் விளங்கும் நெடிய நீலமலை! விண்ணுற ஓங்கி வளர்ந்த மரங்கள்; கொத்துக் கொத்தாய்த் தொங்கும் சத்தான கனிகள்; கனிகளை எறிந்து விளையாடும் குரங்குக் கூட்டங்கள்; கண்ணாடி நீரோடைகள்; கதிரவன் ஒளிபட்டு வெள்ளித் தகடுகளாக மின்னும் மீன் கூட்டங்கள்; பண்ணிசைக்கும் புள்கள்; மலர்ந்து மணங்கொட்டும் பூக்கள் முதலியன நீலமலையின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன; எழில் பொழிகின்றன.

நீண்டு விரிந்துகிடக்கும் இந்த மலைத்தாயின் மடியிலே விளையாடும் மலைக்குடி மக்கள் பலர். நீலமலை என்றால் தோதவருடன் கோட்டரும், படகரும் கட்டாயம் நினைவுக்கு வர வேண்டும். நெடுங்காலத்திற்குமுன் நம்மைவிட்டுப் பிரிந்து சென்று தனியே திரிவோர் அன்னார். இம் மூன்று கூட்டத்தாரும் தனித்தனி ஊர்கள் அமைத்துத்தான் வாழ்ந்தனர் 50, 60 ஆண்டுகட்கு முன் வரையும். சிந்தனை நலன் இல்லை இம்மக்களிடம். உழைக்கும் வகுப்பினரான கோட்டர் கத்தி, கொழு, அரிவாள், மண்வெட்டி முதலிய பல பொருள்களையும் தம் சொந்தத் திறமையால் மற்றையோர்க்குச் செய்து தந்து, மற்றக்குடியினர் தரும் பொருளைக்கொண்டே வாழ்ந்தனர். கொல்லு, தச்சு முதலிய பல தொழில்களுக்குப் படகரும், தோதவரும் கோட்டரை நம்பித்தான் வாழ்ந்தனர்.

கோட்டர் தொழில் திறன் இருந்தும் அடிமைப் போக்காலும், மூட நம்பிக்கையாலும் அடித்தளத்திலேயே கிடந்தனர். ஆண்டுக்கொரு முறை படகர்தரும் நெல் முதலியவற்றையும், தோதவரிடம் கிடைக்கும் செத்த எருமைமாடுகளையும்நம்பி வாழ்ந்தனர். கோட்டர். எருமைத் தோலையும் அதன் கொம்பையும், அடிவாரத்திலிருந்து வரும் லெப்பையிடம் விற்றுப் பெறுகின்ற பொருளைக் குடியில் செலவழித்துவிடுவர். குடிப்பதோடு மட்டுமல்ல, கடவுளின் பெயர் சொல்லி விருந்து வைத்தும் விழாக் கொண்டாடியும் பொருள் இழந்தனர். தன்னம்பிக்கை அற்ற புழுக்கூட்டமாய், செத்த விலங்குகளைக்கூடப் பெரும் பரிசாய்க் கருதிப் பெற்றுத் தின்றனர். தலைப்பாகையுடன் படகரையும் நீண்ட போர்வையுடன் தோதவரையும் கண்டுகூட இம்மக்கள், கிழியாத ஆடை பெறுவது அரிதாயிற்று. துன்பம் எதுவும் ஆண்டவனின் சினம்தான் என்ற குருட்டு நம்பிக்கைத்தளையில் தலையை மாட்டிக் கிடந்தனர். கத்தி பட்டுக் காயம் பட்டுவிட்டாலும் மருந்து போடமாட்டார்; ஆண்டவனுக்குப் பலி கொடுப்பர்.

மாடு மேய்ப்பதைத் தவிர வேறு வேலைக்குச் செல்லாத தோதவரும், உழவைத் தவிர வேறு பணிபுரியாப் படகரும் கோட்டரைக் கீழாராகவே கருதிவந்தனர். கோட்டரும், "ஏன்? எதற்கு?" என வினு வெடிகளை விடுப்பதில்லை. படகருடைய கோவில் பக்கமோ, தோதவர் கோவில் மருங்கோகூடக் கோட்டர் செல்லக் கூடாது. "மேல்வகுப்பாராது கோவில்கள் பக்கம் செல்லக்கூடாதென்று தானே கட்டளை. நாமே நம் கோவில்களை அமைத்துக்கொள்வோம்!" என எண்ணித் தமக்கென்று பல கோவில்களைக் கட்டி வழிபட்டனர். மூடநம்பிக்கை உச்சி முடிக்குச் சென்றது.

கோட்டர் குடியிருப்பில் நோய் கண்டுவிட்டால், அது அதற்குரிய கடவுளின் சினத்தால்தான் வந்தது என்று எண்ணி நடுங்குவர். அம்மை வார்த்துவிட்டால் மாரியம்மனுக்குப் பலி கொடுப்பர். ஆம்! அம்மக்கள் அறிந்த ஒரேமருந்து அதுதான்.

பசிய அத்தண்மலைச்சாரலிலே பெரங்கநொடா கோட்டகிரி என்பது ஒரு ஊர். பெரங்கநொடாக் கொடுமுடி என்பது இதன் பழம்பெயராய் இருக்கலாம். மற்றக் குடியிருப்புக்களைவிட இக்கோட்டகிரி அளவிலும், பழைமையிலும் பெயர் பெற்றது. இக்கதை நடந்த அன்றோ அது கோட்டர் மட்டும் வாழ்ந்து வந்த ஒரு ஊர். உழைப்பால் திரண்ட தடந்தோள்களும், அறியாமையால் மழுங்கிப் போனவறிய உணர்வுகளும்கொண்ட ஏமாளிகளாய்ப் பல கோட்டர் அங்கே வாழ்ந்தனர். அந்நாட்களில் ஓர் அதிர்ச்சி!

திடீரென்று சிலருக்கு வயிற்றுப் போக்குக் கண்டது; மருண்டனர்; சிலர் மாண்டனர். ஊரார் கூடினர். "கொள்ளை நோயில் கூட்டம் கூட்டமாக நம்மவர் மாள்கின்றனர். மாரியாத்தாளின் சினந்தான் நம்மை வாட்டி வதைக்கிறது" என்றான் ஒரு வல்லான். அவன் வகுத்த வாய்க்கால் வழியே மற்றையோரின் அறிவுகளும் பாய்ந்தன. "முடை நாறும் உடைகள், காற்றறியாக் குடில்கள், கெட்டுப் போன நீர் நிலைகள், சத்துக் குறைவான உணவுகள் முதலியவற்றையே நாம் காண்கிறோம். புழுக்களாய் இப்படி மலைச்சாரலில் வாழ்கின்ற நம்மிடம் வயிற்றுப் போக்கு வராமலா போகும்?" என எவனும் எழுந்து கேட்கவில்லை. மாரியம்மனை வேண்டுவதென்று முடிவுக்கு வந்தனர்.

பல உயிர்கள் பலியாயின; கொட்டு முழக்கார்த்தன; மாரியம்மன் கோவில் கொலைக்களமாயிற்று. என்றாலும் கொள்ளை நோய் மக்களை வாரிச் சுருட்டிக்கொண்டுதான் இருந்தது. "இனியும் இங்கிருப்போர்க்கு இறப்புத்தான் கிட்டும்,. கட்டாயம்" என நினைத்து அஞ்சிய மக்கள்–நோய்க்கு மிஞ்சிய மக்கள்–விரைந்து ஊரை விட்டே வெளியோடினர். தம் தம் குடிசைகளை விட்டு ஓடிய மக்கள் இருண்ட காடுகளில் புகுந்தனர். ஆண்டவன் கைவிட்டபின் மருந்தையாகிலும் நாடலாம் என்றால், எம் மருந்தைக் குடிப்பது எனவும் தெரியவில்லை· ஆனால் இடமாற்றம் ஓரளவு அமைதியை ஊட்டியது. துன்பம் சற்றுக் குறைந்தது என்றாலும் இருள் முழுவதும் விலகிவிடவில்லை.

படகருக்கு உழவு வேலைக்கும் பிற பணிகட்கும் வேண்டிய கருவிகள் கிடைப்பது அரிதாயிற்று. சிறு கருவிகள் ஆனாலும் கோட்டர் இல்லாவிட்டால் படகருக்கு ஒன்றும் இயலாது. அவ்வளவு, "தொழில் செழித்திருந்த பொற்காலம்" அது! படகர் தொல்லை மிகப் பட்டனர். சிலர் கோட்டர் இருப்பிடம் நாடிச்சென்று உதவிபெற முயன்றனர்; முடியவில்லை; இருப்பிடம் தெரியவில்லை.

முண்டசோகி என்பான் ஒரு படகன். தன் கருவிகளைத் தீட்டிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதும் பக்கத்துக் கோட்டகிரியான★ பெரங்கநொடாவிற்கு வந்தான். கொள்ளை நோய்க்கு அஞ்சிக் கூண்டோடு கோட்டர் ஊரை விட்டோடியதை அவன் அறியான். ஊரை அடைந்து தனக்குத் தொழில் புரியும் கோட்டனைத் திரும்பத் திரும்பக் கூப்பிட்டான். அவன் ஒலியைத்தான் மலைக்குன்றுகள் எதிரொலித்தன!

கோட்டரெல்லாரும் எங்கே? ஊரே சுடுகாடாய்க்கிடக்கிறது. பிணவாடையும் கழுகுக்கூட்டமும்தான் வருகின்றன. மகிழ்வொலி வெள்ளம் மிகுந்த ஊரில், இடுகாட்டமைதி இதயத்தைப் பிழிகிறது. கந்தமூலாதி புசித்துக் காடுகளிலே திரிவோர்க்கு அமைதி என்றால் மிகப் பிடிக்குமாம். சோகிக்கோ மக்களே இல்லாத குடியிருப்பின் சாவமைதி பிடிக்கவே இல்லை. நெஞ்சைக்குடையும் கொடுமையைக் காணப் பொறுக்காது ஊருக்கு வெளியே வந்தான்.

நெளிந்து வளைந்துகிடந்த கொடிவழிகளின் ஊடே சென்று தன் ஊரை அடைந்தான். உற்றார் உறவினரிடம் நடந்ததைச் சொன்னான். கொள்ளை நோய்க்கு நடுங்கி எல்லாரும் குடி பெயர்ந்து போனதைச் சொன்னான் ஒரு படகன்.

சோகி சிந்தித்தான்: "எல்லோரும் இப்படி ஓடிவிட்டால் வேண்டிய உதவிகளைப் பெறுவது எப்படி? கோட்டர் இல்லாவிடின், படகர் வீட்டு இழவுச் சேதியைச் சுமந்து செல்வதற்குக்கூட ஆளில்லையே! உழவுக்கு வேண்டிய கருவிகளைக் கூறப் பெறமுடியாதே! நெடுந் தொலையில் இப்போது அம்மக்கள் வாழும் இடத்திற்குச் சென்று உதவி பெறலாமென்றால் அடிக்கடி அப்படி அலையமுடியாதே! மறுபடியும் இதே இடத்திற்குக் குடி வந்தால்தான் எளிதில் செல்லலாம்; வேண்டியன பெறலாம். கொள்ளை நோய் என்று வெருண்டோடிய மக்கள் திரும்பவும் இங்கேயே வருவதற்குரிய வழி...? அவர் தம் அச்சம் களையப்பட வேண்டும். அப் பாமர இதயங்களின் வீண் ஊசலாட்டங்களை நிறுத்தினால்தான் தீர்வு காணமுடியும்! அதற்குரிய வழி...?

ஃ ஃ ஃ

"என்ன வழி கண்டான் தெரியுமா?" என்றான் நண்பன் சுடலை. அவன் அண்மையில் நீலமலை சென்று அங்குள்ள மலைக்குடிகளின் வாழ்வை அறிந்து, ஒரு சுமைக் கதைகளுடன் வந்திருக்கிறான்.

"சொன்னால்தானே தெரியும்!" என்றோம், நானும் கவிராயர் அருணவும்.

மேலும் தொடர்ந்தான் சுடலை.

ஃ ஃ ஃ

முண்ட சோகி ஒரு தீர்மானத்துடன் கோட்டரின் புதிய இடத்திற்குச் சென்றான். படகனின் வருகையைக் கண்ட கோட்டர் ஒதுங்கி நின்று வணக்கம் செய்தனர்; அவன் வாழ்த்தினான். பின் உரைத்தான். "நேற்று நான் உமது பழைய குடியிருப்புக்கு என் கத்தியைத் தீட்டிக்கொண்டு போகலாமென வந்தேன் ஒருவரையும் காணோம். ஏமாந்து என் ஊர் திரும்ப நினைத்துச் சாலைக்கு வந்தேன். உம்மைக் காணோமே என்ற வருத்தத்தில் தலைகுனிந்துகொண்டே நடந்தவன், கிழக்கு மூலைக்கு வந்ததும் திடீரென ஓர் ஒலி கேட்டு நிமிர்ந்தேன். எதிரே ஒரு கோடு வரி உழுவை! தீப்பந்த விழிகளோடு நின்ற அப்புலியைக் கண்டதும் அடி எடுத்து வைக்கலாமென்று முனைந்தேன்...நகரவேமுடியவில்லை. அச்சத்தால் கௌவப்பட்டுச் சிலையானேன். மேலும் என்னை விந்தைக்குள் மூழ்கச் செய்தது என்ன தெரியுமா? அந்தப் புலி பேசியது! ஆமாம்! மனிதரைப் போலவே பேசியது. ஆனால் முதல் இரண்டு மூன்று சொற்களைத்தான் என் மொழியில் பேசியது. பின் முழுவதையும் உம்மொழியில் பேசியது. என்றாலும் எனக்கு எழுத்துக்கு எழுத்து நினைவிருக்கிறது. 'ஏ, படகனே! இதைக் கேட்டு இங்கிருந்தோடிய கோட்டரிடம் சொல்!' என்று சொல்லிவிட்டுப் பின்னால் உங்கள் மொழியில் சொன்னது!"

"மூட்டை"யை விரித்த படகன் புலி சொன்னதாகச் சில சொற்களைக் கோட்டர் மொழியில் சொல்ல மற்றொரு முதிய கோட்டன் அதை மொழி பெயர்த்தான். "இடம் பெயர்ந்த கோட்டர் அனைவரும் உடன் ஊருக்குத் திரும்பி, புலியப்பனுகிய எனக்குக் கோவில் ஒன்று இதேஇடத்தில் கட்டினால், இனிமேல் இந்நோயே இவ்வூரை அணுகாது! என்னை இக்கோட்டர் சரியாய் வழிபடாததால் நானே இக்கொள்ளை நோயை ஏவினேன்!" என்று புலி சொன்னதாக மொழி பெயர்த்தான் அம்முதியோன்.

"ஆகா! ஆண்டவன் புலியப்பன்தான் நம்மீது அருள் பொழிகிறான் என அறியாது, அவனுக்குரிய மரியாதையைச் செய்யாது இருந்துவிட்டோமே!" எனத் துடித்தனர் கோட்டர், இந்த "மாபெரும் உண்மை"யை அறிந்துவிட்டதால்! காட்டுக்குள் வதைந்துகொண்டிருந்த கோட்டரனைவரும் திரண்டனர்; திரும்பினர் ஊருக்கு. தலைக்கட்டுக்கொருவராய்க் கிளம்பி, கோவிலைக் கட்டினர். உள்ளே புலி ஒன்றின் சிலையையும் வைத்தனர். பழைய அந்த ஊரிலேயே அமைதியாய் வாழத் தொடங்கினர். இன்றும் அம்மக்களின் வழியினர் வாழ்கின்றனர், அந்தப் பெரங்கநொடாவில்.

கொள்ளை நோய் சின்னாட்கள் நிலவிவிட்டுப் பின் தன் போக்கில் அழிந்துவிட்டதென்றும், எப்படியோ தம் உள்ளங்களில் ஏற்பட்ட நம்பிக்கையால் தான் மறுபடியும் அம்மக்கள் வாழ முடிந்தது என்றும், உளமருட்சியே வாழ்வுத் துன்பங்கட்குத் தாய் என்றும் அம்மக்கள் உணரவேயில்லை. அவற்றைமட்டுமா? "புலியப்பன்" என அன்னார் வழிபடும் **கடவுளின் தந்தை முண்ட சோகிதான்** என்பதையும் உணரவில்லை!

-மா. பாண்டியன்.

★ கோட்டர் குடியிருக்கும் இடம் கோட்டகிரி எனப்படும்.

அடுத்த இதழில்...

கண்ணதாசன்–

சாவு.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 6 | 7—11—'59 | இதழ் 21

நமது விளக்கமும் மறுப்பும்.

பண்டாரநாயகா மாண்டபோது வருந்தினோம். இப்போது, அதைவிட மிகவாக வருந்துகிறோம்.

அரசியல் கொலைகள் நிகழும்பொழுதெல்லாம் கண்டித்தோம். இப்போது வீண் பழியான கூற்றொன்று கிளம்பியிருப்பதைக் கண்டிக்கிறோம்.

பண்டாரநாயகா—இலங்கையின் முன்னாள் பிரதமர்—வெறியர்களின் குறிக்கு இரையானது கண்டு வருந்தினோம். எவர் எதற்காக இக்கொலையைச் செய்திருந்தாலும், அது கண்டனத்திற்குரியதே என்பதைச் சுட்டிக் காட்டினோம். "களவும் சூதும் கொண்ட தீய மதியினர், தீய்த்துவிட்டனர் ஓர் அரசியல் அத்தியாயத்தை. உலகில் அமைதியே தவழ வேண்டும் என்று விழையும் நாம் இந்தக் கொடுஞ்செயலைக் கண்டிக்கிறோம் !" என்றோம்.

இப்படி அரசியல் கொலைகளை நாம் இன்றுமட்டுமன்று; என்றும் கண்டித்திருக்கிறோம் அன்னார் நம் இயக்கத்திற்கும் இனத்திற்கும் இடையூறு செய்தோராயினும் நாம் அவர்களின் மறைவு கண்டு வருந்தியிருக்கிறோம்.

காந்தியார் வகுப்பு வாதத்திற்குப் பலியானபோது, தமிழகத்தில் வானொலி மூலமும் எழுத்தின் மூலமும் மேடை மூலமும் கண்டனக் குரலைக் கிளப்பினோம் நாம்.

லியாகத் அலிகான் மறைக்கப்பட்டபோதும் அரசியல் கொலைகளைக் கண்டித்திருக்கிறோம்.

அவுங்சானை ரத்தம் சிந்த வைத்தனர் அரசியல் கொலைக்காரர்கள் என்றறிந்தோம்; இஃது அநாகரிகம் என்றறைந்தோம் !

எங்கெங்கே அரசியல் வாழ்வு சரிக்கப்பட்டாலும், அங்கங்கே நம் கவலையை—கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

இவை எல்லாம் நாம் அரசியலில் எந்த அளவு நேர்மையைக் கடைப்பிடிக்கிறோம் என்பதைக் காட்டுகின்றன; மற்றும் நாம் எந்த அளவு ஒழுங்கை விழைகிறோம் என்பதையும் காட்டுகின்றன.

இப்படித்தான் பண்டாரநாயகா அவர்கள் மாண்ட காலையும், காசிம் அவர்களைச் சிலர் கொல்ல முயன்றபோதும் நாம் நம் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

நம் இயக்க ஏடான "நம் நாடு" **"இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா இன்றுகாலை 7-45 மணிக்குக் காலமானார் என்ற செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்"** என்று அவர் மறைவுச் செய்தியை 26 9 59-ம் நாளிட்ட இதழில வெளியிட்டுத் தன் வருத்தத்தைத் தெரிவித்தது.

நாமும் நம் ஏட்டின் 3-10-59-ம் நாளிட்ட இதழில் இக்கொலையை "மக்களாட்சிப் பண்பு சிதைக்கப்பட்டுவிட்டது இலங்கையிலும் என்ற சேதி கேட்டு நாமும் வருந்துகிறோம்...!" என்று எழுதியதன்மூலம் கண்டித்தோம்.

இவ்வளவு நிலைக்குப் பின்னும், இலங்கைப் பாராளும் மன்றத்திலே ஒரு விந்தை 'மனிதர்" எழுந்து பேசியிருக்கிறார். பண்டார நாயகாவின் கொலைக்கு உள்நாட்டு அரசியல் வாதிகளே பொறுப்பு என்ற உண்மை இலங்கையின் பாராளும் மன்றத்தில் பூடகமாகத் தெரிகின்றது, நீண்ட வாதத்திற்குப் பின்பு. இருந்தும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஆன பண்டார நாயகா எனப்படும் ஆள், தனது நீண்ட நாவைச் சுழற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. பண்டாவைக் கொலை செய்தது, அமெரிக்கர், யூகோசுலேவியர், இன்னும் பல கத்தோலிகர் என்றும் குற்றம் சாட்ட வந்திருக்கிறார். அத்தோடு நிறுத்தியிருந்தாலும் நாம் பதில் சொல்லவேண்டியதில்லை. உண்மைக்கு மாறாக, நம்மையும் இழுத்துப் போட்டிருக்கிறார்.

நாம் கோழைகளல்ல; ஆனாலும் கொடுவாளேந்தியதில்லை மாற்றாரை நோக்கி. தில்லியை எதிர்ப்பதற்கும் அறவழிகளையே கையாண்டிருக்கிறோம். அத்தோடு நாம் பிறநாட்டு அரசியலில் எவ்வகைப் பங்கும் பற்றுவதில்லை. உண்மை இதுவாயிருக்க, பொய்யுரை செய்து, வீண்பழி சுமத்திய இலங்கைப் பாராளு மன்ற உறுப்பினரை, அறிவுலகம் கண்டிக்கிறது. காலத்தே அவர் உண்மையை உணர்ந்து, நல்லன மொழிவார் என்றெண்ணுகிறோம். அவருக்கு நம் தூய இதயத்தைக் காட்டவே, இதே பக்கத்தில் பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம்.

படித்து, உண்மையை உணரட்டும்.
உணர்ந்து, நாவைத் திருத்தட்டும்.
திருத்தி, இதயத்தைத் தூய்மைப்படுத்தட்டும். ★

இலங்கை எதிர்க்கட்சி உறுப்பினரின்
வீண் குற்றச்சாட்டுக்குப்
பொதுச்செயலாளர் மறுப்பு.

இலங்கைப் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினரான திரு. பண்டாரநாயகா என்பவர், இலங்கை முதலமைச்சராயிருந்த பண்டாரநாயகாவின் கொலைச் சதிக்குத் தென்னக திராவிட முன்னேற்றக் கழகமும் உடந்தையாக இருந்ததாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கும் கூற்றைச் செய்தித் தாள்களில் படித்துத் திடுக்கிட்டுப் போனேன். அந்தக் கூற்று உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட, முழுப் பொறுப்போடு மறுக்கத்தக்க, வன்மையாகக் கண்டிக்கத்தக்க, நடுநிலையாளராலும் நல்லறிவு படைத்தோராலும் வெறுக்கத்தக்கக் கற்பனை செய்யப்பட்ட, வீண்பழியாகும். பொறுப்புவாய்ந்த ஒரு பாராளு மன்ற உறுப்பினர் உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கூற்றை எப்படிக் கூறத்துணிந்தார் என்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

கருத்து வேற்றுமையைக் கத்திமுனையாலோ அல்லது துப்பாக்கிக் குண்டாலோ தீர்த்துக்கொள்ளும் இழிசெயலை, 'அருவருத்தொதுக்கத்தக்க காட்டுமிராண்டியின் கயமைச்செயல்' என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் படுகொலை ஏற்படும் போதெல்லாம் கூறி வருகிறது. தி. மு. கழகம், அறவழியில் நின்று செயலாற்றி வருவதிலேதான் தன் கருத்தினைச் செலுத்தி வருகிறது.

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைவாழ் தமிழர்களிடையேயும் தென்னகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றுள்ள தமிழர்களிடையேயும் நல்லுறவு ஏற்படவும், அவர்களின் நல்வாழ்வு தழைக்கவும், அவர்களிடையே பகுத்தறிவு நெறி பரவவும் ஆன அரும்பணிகளைப் புரியும் ஒரு பண்பாட்டு அமைப்பாகத்தான் இருந்து வருகிறது. தென்னக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பண்பாட்டுத் தொடர்பைத் தவிர வேறு அரசியல் தொடர்பு எதுவுமில்லை. மேலும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை அரசியலில் ஈடுபடுவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரின் கூற்று மறுத்தொதுக்கத்தக்கது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

மதுரையில்
௨௨-11-'59 அன்று
மதுரை மாவட்ட
தி. மா. மு. க. மாநாடு
கூடுகிறது.
அனைவரும் வருக !

பண்டைத் திராவிடம்

ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை.

பா. இளவழகன்
பி. எஸ்சி., எம். ஏ.

இன்றைக்கு இருக்கும் திராவிடத்தையும், அல்லது பெறவேண்டிய திராவிட நாட்டைக் குறித்தும் எழுதாது, பண்டைத் திராவிடத்தைப் பற்றிப் எழுதப் புகுந்ததேன் என்ற வினு எழுவது இயற்கையேயாகும். பழம் பெருமையை எழுதி வீணுகக் காலம் கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தலைப்பை நான் எடுத்துக்கொள்ளவில்லை; மாருக, ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கின்றவன் என்ற முறையில், நாம் வாழும் இந்தத் திராவிடம், தென்னகம், பண்டைக்காலத்தில், ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் எவ்வாறு திகழ்ந்தது? இந்த நாட்டைச் சிறப்போடு ஆண்டு பெருமை படைத்த திராவிடர் யார்? என்ற விணுக்களுக்குச் சரியான விடையிறுக்க வேண்டும் என்ற எண்ணத்தினுலேயே ஆகும்.

பண்டைத் திராவிடத்தைப் பற்றிய உண்மையான கருத்துக்கள் பலவும், அவர்களிடையே குடியேறிய ஆரியர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. இந்தக் கீழ்மையான பணி ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முற்பட்டிருந்தே தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. வந்தவர்கள் செய்தது போதாதென்று, இங்கிருந்தவர்களில் சிலரும் அவர்களுக்குப் பக்கத்துணையாக நின்று உண்மை அழிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். இப்பணிக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது போலவே, அண்மையில் ஒரு நூல் வெளிவந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் இயற்றிய 'தமிழ் மொழி, இலக்கிய வரலாறு' என்ற நூலையே (History of Tamil Language and Literature) நான் ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். இவர் தமிழின் பெருமையைக் குறைத்துக் கூறுவதற்கென, தன்னுல் எவ்வளவு இயலுமோ அவ்வளவும் செய்திருக்கிருர். அதற்காக அவர் பல சிறு நூல்களும், கட்டுரைகளும் எழுதியிருப்பினும், அவற்றையெல்லாம் விஞ்சக்கூடிய வகையிலேயே அவருடைய இறுதி நூல் அமைந்துள்ளது. அவர் தம் நூலில், தமிழரின் மொழிவளத்தையும், கருத்து நலத்தையும் எந்த அளவு பழித்தும் தாழ்த்தியும் கூற இயலுமோ அந்த அளவு முயன்று கூறியுள்ளார். அவருடைய கருத்தின்படி, தமிழர்க்கென்று எதுவும் சொந்தமான நூலோ, கருததோ, சொல்வளமோ கிடையாது. தமிழின் இணையற்ற செல்வங்களெனக் கருதப்படுகின்ற தொல்காப்பியமும், திருக்குறளுமே சமஸ்கிருதத்தினின்று திருடப்பட்ட சொத்துக்கள் என்று அவர் சற்றும் தயங்காமல் தம் நூலில் வெளியிட்டுள்ளார். தொல்காப்பியம் தமிழரின் பழம்பெரும் இலக்கணம், சங்க இலக்கியத்திற்கு முற்பட்டது; ஏறத்தாழ கி. மு. 500-க்கு-முற்பட்டது என்று உலகமே ஒப்புக்கொண்டுள்ளது. அதுபோன்றே திருக்குறளும், தமிழர் உலகுக்குகந்த ஒப்பற்ற பழம் செல்வமாகும்; கி. பி. 2-ஆம் நூற்ருண்டு அல்லது அதற்குச் சற்று முற்பட்டது என்றே உலகம் முழுவதும் ஒப்பி வந்திருக்கிறது. ஆனல் இக்கருத்துக்களை அப்படியே விட்டுவிட்டால், அது தமிழர்க்குத் தேவையற்ற மதிப்பினைத் தருகிறது என்று கருதியதனுல் போலும், அவை இரண்டுமே சமஸ்கிருதத்தினின்று களவாடப்பட்ட நூல்கள் என்று அவர் கூறியுள்ளார். பாணினீயம், ஐந்திரம், பரதநாட்டிய சாத்திரம் போன்ற வடமொழி நூல்களில் கருத்துக்களைத் திரட்டியே தொல்காப்பியனுர் தமிழில் இயற்றினுர் என்றும்; அதுபோன்றே, மனுநீதி சாத்திரம், அர்த்தசாத்திரம், சுக்கிரநீதிபோன்ற வேறு பல நூல்களின் கருத்துக்களை அடக்கியே வள்ளுவர் குறளினை யாத்தார் என்றும் அவர் சற்றும் கவலைப்படாமல் கூறியுள்ளார். ஆனல் இவர் மேற்கோள்களாகக் கூறுகின்ற வடமொழி நூல்கள் சில பிற்பட்ட காலத்தைச் சேர்ந்திருப்பதால், இவர் தம் கருத்தினை வலியுறுத்துவதற்காகத் தொல்காப்பியரையும், வள்ளுவரையும் காலத்தால் எவ்வளவு பின்னுல் கொண்டுவந்து நிறுத்தமுடியுமோ அவ்வளவும் முயன்றுள்ளார். தொல்காப்பியரை ஏறத்தாழ 1000 ஆண்டுகள் பின்கொணர்ந்து கி. பி. 500-ஐச் சேர்ந்தவர் என்றும், வள்ளுவனுர் கி. பி. 600-க்குப் பிற்பட்டவர் என்றும் மிகவும் முயன்று நிறுவுகிருர். இந்தக் கருத்துக்கள் எந்த அளவு பொருந்தும் என்ற ஆராய்ச்சி ஒருபுறமிருக்க ஈண்டு நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது அவ்வாறு அவர் கூறியதன் நோக்கத்தையே ஆகும். தமிழர்கள் - திராவிடர்கள் சொந்த ஆற்றலோ, அறிவோ, சிந்திக்கும் திறனே இல்லாதவர்கள் என்று நிலை நாட்டுவதற்காகவே இவ்வாறு அவர் முயன்றுள்ளார். தமிழர் தம் இருபெரும் சொத்துக்களைக் களவாடப்பட்டவை என்று கூறியதுடன் மட்டுமல்லாது, தமிழர் தம் சொல்வளத்திலும் அவர் குறைகள் கண்டிருக்கிருர். தமிழர் தம் அன்ருட வாழ்க்கையில் பயன்படுத்தி வரும் மலை, மயில், பண்டம், தோணி, தூண், வரகு, அமிழ்துபோன்ற பல நூற்றுக்கணக்கான சொற்களும், சமயக் கோட்பாடுகளும், அவற்றின் தொடர்பான பல சொற்களும் சமஸ்கிருதத்தினின்று கடன் வாங்கப்பட்டன என்று அவர் தெளிவாகக் கூறியுள்ளார் (History of Tamil Language and Literature P. 41 to 42). பேராசிரியர் மறைந்துவிட்டார். இவ்வளவு துணிச்சலோடு பொய்கள் பல புனைந்துரைத்து, தமிழரை வருந்தத்தக்க நிலைக்குக் கொண்டு வந்த அவர், இன்னும் வாழ்ந்திருந்தால் என்ன செய்திருப்பாரோ நாம் அறியோம். ஆனல், அவர் மறைந்த பிறகும், அவருடைய பணியைத் தொடர்ந்து செய்கின்றனர் பலர்... ஒருவர் இருவர் அல்ல; தமிழ் அழிவை விரும்புகின்ற பலரும் தொடர்ந்து செய்து வருகின்றனர். இவர்களுக்குப் பக்கத் துணையாக ஒரு கட்சியே பணியாற்றுகின்றது. தமிழரைப்பற்றிய தவருன பல கருத்துக்களை- ஆதாரமற்ற கருத்துக்களை, ஏராளமாகக் கூறுகின்ற இந்நூல்தான் அன்னுர்க்கு வேத நூலாகத் திகழ்கின்றது. இந்நூல் அவர்களால் பல முறை அச்சடிக்கப்பட்டு விளம்பரப் படுத்தப்படுவதுடன், ரசியாபோன்ற நாடுகளில் தமிழ் கற்பவர்க்குத் தமிழ் வேத நூலாகப் போற்றியுரைக்கப் படுகின்றது. அதுவும் போதாதென்று தமிழகத்தின் கலாசாரத் தூதுவர்களாகச் சென்று வருகின்ற பேராசிரியர்கள் பலரும் அந்நூலையே தம் சான்று நூலாகக் கொண்டு, தமிழைப் பற்றியும், தமிழரைப்பற்றியும் தவருன கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

ஆனல், அவருடைய கருத்துக்கள், "எந்த அளவு தவறுடையன? தமிழரைப்பற்றியும், பண்டைத் திராவிடரைப்பற்றியும் வையாபுரிப் பிள்ளை எவ்வளவு தவருகப் புரிந்துகொண்டார்?" என்பவற்றையும் விளக்கவே ஈண்டுப் பண்டைத் திராவிடம் என்ற தலைப்பினைக் கொண்டு எழுத முன் வந்தேன்.

பண்டைத் திராவிடத்தையும், அதில் ஈடும் இணையுமற்ற வகையில் சிறப்புடன் வாழ்ந்த திராவிடரைப் பற்றியும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் முன்னுள் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த திரு. வி. ஆர். இராமசந்திர தீட்சதர் என்பவர் சிறந்த சில ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆற்றி, அவற்றைப் பின்னர்த் தொகுத்து, வரலாற்றுக்கு முற்பட்ட தென்னகம் (Pre-historic South India) என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். பேராசிரியர் தீட்சதர் பார்ப்பனரே என்றுலும், பாரபட்சமற்ற வகையில் ஆராய்ந்து அவருக்கு உண்மையெனப்பட்ட பல கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறியிருப்பது வியக்கத்தக்கது. முற்கண்ட வையாபுரிப் பிள்ளையவர்கள் செய்த துரோகச் செயலையும், தீட்சதரின் பாரபட்சமற்ற தன்மையையும் ஒப்பநோக்கும்பொழுது மேலும் வியப்படைய வேண்டியுள்ளது. மற்றும் மேலைநாட்டைச் சேர்ந்த டாக்டர் கில்பர்ட் ஸ்லேடர் (Dr. Gilbert Slater) என்பார், ஆரியம், திராவிடம் -ஆக இருவகைப் பண்பாடுகளையும் நன்கு ஆராய்ந்து இன்றைய இந்து சமயத்தில் எந்தப் பண்பாடு அதிக இடம்பெற்றிருக்கிறது என்று முடிவு காணும் முறையில் 'இந்தியப் பண்பாட்டில் திராவிடத்தின் பங்கு' (Dravidian Element in Indian Culture) என்ற ஒரு அரிய நூலை வெளியிட்டுள்ளார். இத்தகைய வரலாற்று உண்மைகளை விளக்கும் நூல்களை நோக்கும்பொழுது, நாம் எந்த அளவு ஏமாற்றப்பட்டிருக்கிருேம்; இப்பொழுதும் ஏமாந்து கொண்டிருக்கிருேம் என்ற உண்மைகள் நன்கு புலனுகும்.

பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம், மனிதரின் பண்பாட்டைப் பொறுத்தவரைப் பழங்கற்காலம் (Pabolithic Age), புதுக்கற்காலம் (Neolithic Age), உலோக காலம் (Metal Age) என்று மூவகையாகப் பகுக்கப்படும். உலக நாகரிகங்கள் ஒவ்வொன்றும் இந்த மூன்று படிகளையும் கடந்தே வந்துள்ளன. திராவிடமும் இதற்கு விலக்கன்று. மனிதன் என்று தோன்றினுனே அன்றிலிருந்தே திராவிடத்திலும் மனித இனம் வாழ்ந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள தண்டகவனத்தில்தான், முதல் முதல் மனிதஇனம் தோன்றிப் பின்னர் உலகெங்கும் பரவியிருக்கவேண்டும் என்று சர் ஆரி சான்ஸ்டன் (Sir Harry Johnstone) என்ற மனித இயல் வல்லுனர் கருதுகிருர், அதே கருத்தையே வி. ஆர். ஆர். தீட்சதரும் வலியுறுத்திக் கூறுகின்ருர்.

பழங்கற்காலம்: மனிதனின் பழங்கற்காலம் என்ற பகுதிக்கு வந்தால், திராவிடத்தில் பழங்கற்கால நாகரிகம் சிறப்பாகவே இருந்தது என்பதற்கு. இன்று புதைபொருள்களாகக் கிடைத்துள்ள பல பொருள்களும் சான்று பகர்கின்றன. மதுரை, தஞ்சை, மைசூர், கடப்பா, வடஆற்காடு, செங்கற்பட்டு, நெல்லூர் ஆகிய பல மாவட்டங்களிலும் இத்தகைய பழங்கற்காலப் புதைபொருள்கள் பல கிடைத்துள்ளன. முக்கியமாக, சென்னை அருகில் பல்லாவரத்தில் கிடைத்துள்ள சில பொருள்களின் அருமைப்பாட்டைக் கண்டு அக்காலக் கற்கருவிகளுக்கு சென்னைக் கருவித்துறை (The Madras Industry) என்றே புதைபொருளியல் வல்லுனர் பெயரிட்டுள்ளனர். அக்கற்கால மக்கள் சமயத்துறையில் அவ்வளவு வளர்ச்சியுறவில்லையெனினும், அவர்கள் தாய்வழிபாட்டை (Mother Goddess) மேற்கொண்டிருந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் கிடைத்துள்ளன - அதாவது உணவுப்பொருள்கள் தரும் நிலத்தைத் தாயாகக்கொண்டு வணங்கும் முறை. இதுவே பிற்காலத்தில்

— 9-ம் பக்கம் —

பாகவதர் மறைவு-

பொதுச்செயலாளர் பரிவு.

பொதுவாகத் திராவிடப் பெருங்குடி மக்கள், குறிப்பாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளமெலாம் கொள்ளைகொண்டவரும், நாடக அரங்கிலும், திரைப்பட அரங்கிலும், இசையரங்கிலும் ஈடும் எடுப்பும் அற்ற ஓங்குபுகழ் கொண்டவராய் விளங்கி இருந்தவரும், இனிய-எளிய-நயமான-கவர்ச்சிகரமான இசையால் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்திற்கு இன்பம் ஊட்டி வந்தவரும், ஏழிசை மன்னர் என்று பெருமை பெற்றவரும் ஆன திரு. எம். கே. தியாகராச பாகவதர் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு ஆற்றுெணுத் துக்கமும் துயரமும் கொண்டேன். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் நடித்த திரைப்படங்களும், அவர் பாடிய இசைத் தட்டுகளுந்தான் அவரின் நினைவின் அறிகுறிகளாக இலங்குகின்றன. அவற்றை உரிய முறையில் காப்பாற்றி நாட்டின் அழியாச் செல்வமாக ஆக்கித் தந்திடும் பொறுப்பை உரியவர்கள் மேற்கொள்வார்களாக! அருமை பாகவதர் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், உற்ருர், உறவினர், நண்பர்கள் ஆகியோர் அனைவர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

முகாம்: திருச்சி, 2-11-59.

பழம்பாடல் வரிகளை எடுத்தாள்வது தவரு?

— முன் இதழ்த் தொடர்ச்சி —

4. கருத்துக்கள்...

சொல்லேயும் சொற்களேயும் வரிகளேயும் பாடல்களேயும் எடுத்தாண்ட நிலேமைக்கப்பால் கருத்தை எடுத்தாளுதலில் நம் ஆராய்ச்சி செல்லுகின்றது. கருத்தை ஆளல் என்றுதான் குறிப்பிடலாம் என்றே எடுத்தாளல் என்றுதான் குறிப்பிட வேண்டும் என்றே கூறமுடியாது. ஏன் எனில் சில கருத்துக்கள் தெரிந்தே ஆளப்படுகின்றன; பல கருத்துக்கள் இயல்பாகவே எழ எழுதப்படுகின்றன. எனவே சிந்தனைக்கப்பால், தான் ஆண்ட கருத்தா எடுத்தாண்ட கருத்தா என்று சொல்லமுடியும்.

சீவகசிந்தாமணி எட்டாம் பாடலே எடுத்துக்கொள்க. இதில் வரும் ஆண் உரு-அதாவது ஆணின்உருவமைந்த ஓவியத்தையும் பாராது கன்னிமாடம் சேர்ந்தாள் சுரமஞ்சரி என்பாள். காரணம், சீவகனிடம் வந்தஅவளது வழக்கில் அவள் சுண்ணம் தோற்றதே. இப்பாடலில், ஆண்உருவத்தை ஓவியத்திலும் பாராத நிலேயே சிறந்த குறிப்பு. இதை அப்படியே மனத்துட் கொண்ட தீபங்குடிப் புலவனுன செயங்கொண்டான தனது கலிங்கத்துப் பரணியில் இதை அப்படியே இழைத்து வைத்துப் பாடுகிருன்.

எழுகலிங்க வீரர்கள் தோற்ருேடுகின்றனர். அவர்களேப் பூண்டற அழிக்கின்றனர், சோழிய வீரர்கள். இப்படி அழிப்பவர்கள் எப்படி ஒருவரையும் விடாது அழித்தனர் என்பதைக் கவிஞன் வெகு நயம்பட 'ஓவிய உடல்கள்தான் தப்பின; மற்ற எவையும் தப்பவில்லே' என்று குறிக்கின்ருன்.

இதைக் கவிதையே சொல்லும். பாட்டு : 457.

"இவர்கள்மேல் இனியொருவர்
பிழைத்தா ரில்லே
எழுகலிங்கத் தோவியங்கள்
எழுதி வைத்த
சுவர்கள்மேல் உடலன்றி
யுடல்கள் எல்லாம்
தொட்டீர்த்துப் பிடித்தடித்தார்
சூர ராங்கே."

இவ்வாறே மற்ருெரு குறிப்பு. சங்க காலப் புலவனின் பாடலடி இக்காலக் கவிஞனின் பாடலடியாக உருப்பெறும் விந்தைக் காட்சி.

"உயிர்தவச் சிறிது
காமமோ பெரிதே"

என்பது குறுந்தொகை 18-ம் பாடலின் அடி. இதனை விரிக்கும் இன்றைய உலக எளிமைப் பாடல் இதுதான் :

"காதல் அடைதல்
உயிரியயற்கை-அது
கட்டி லகப்படுந்
தன்மையதோ ?"

முன்னதற்கு இருக்கும் தெளிவைக் காட்டிலும் பின்னதற்கிருக்கும் தெளிவு நிறைந்தது. இந்தப் பின்னடிகள் எவரால் எங்கே ஆளப்பட்டிருக்கின்றன என்பதைச் சிந்திக்கும் அன்பர்களிடமே அதை நிறுத்தி வைக்கின்றேன்.

சுருங்கிய கருத்தை அழகுற விரித்துச் சொல்வதுபோலவே பெருகிய கருத்தையும் எழிலுறச் சுருக்கிச் சொல்வது உண்டு. இதிலும் நயம் குன்ருது; ஆனல் பல இலக்கியங்களேயும் படித்துப் பண்பட்ட அறிவு வாய்க்கப் பெறவேண்டும். அந்தச் சுருங்கிய கருத்தை-வெறும் சாற்றுக் கட்டியாகக் கிடைக்கும் கருத்தை நீரிட்டுப் பெருக்கி அளவான சுவையினதாக ஆக்கிக்கொள்ளவேண்டும். கருத்து அளவுக்கு மிஞ்சிச் சுருங்கும்போதும் மூலத்தின் அழகும் பொருளின் அழகும் கிஞ்சித்தும் கெடாமல் தருவதிலேதான் கவிஞனின் கவிதையாற்றலும், மொழிப் புலமையும், சொல்லாட்சித் திறனும் அவனுக்குப் பெருமையும் புகழும் கிடைக்க வழிவகை கோலுகின்றன. இவ்வாறு வருவனவற்றிலே ஒன்றிரண்டைக் கண்டு செல்வோம்.

"மரு ஒன்று கூந்தலாளை" என்னும் வரி நமக்கு எத்துணையோ பொருள்களைத் தந்து நிற்கிறது. மரு என்ருல் மணம். மணப் பொருந்திய கூந்தல் என்று பொருள். என்ருல் அந்த மணம் எங்கிருந்து வந்தது? கம்பன் மரு ஒன்று கூந்தல் என்றுதான் சொல்கிருன். மணம் பொருந்திய என்ருல் எப்படிப் பொருந்திய? இயற்கையாகவா அன்றிச் செயற்கையாகவா? இந்தக் கேள்வி நம்முன் எழும்போதே பாண்டியனுக்கு ஐயம் உண்டாக, அதனுல் அவன் ஒரு பொற்கிழி கட்டித் தொங்கவிட்டுக் கேட்க, அதற்கு விடையாகத் தருமியென்பான் தவறு நிரம்பிய பாடல் ஒன்றை எழுதிச் சென்று கேட்க, அது குற்றமுடையது என்று நக்கீரன் சொல்ல, மறு நாள் இறைவனே வர, அப்போதும் அஞ்சாது எதிர்த்துத் தன் கருத்தையே நாட்டினன் கீரன்-மன்னனும் ஐயம் தவிர்ந்தான் எனும் கட்டுககதை நினைவிற்கு வருகின்றது. குறுந் தொகையிலே இறையனுர் என்னும் புலவர் பாடியகொங்குதேர் வாழ்க்கைப் பாடல் நினைவிற்கு வரவும் மீண்டும் சிந்தனை மடங்கி எழுகின்றது. காரணம் 'மருஒன்று கூந்தல்' என்ற கவிஞனின் வாக்கே. நிற்க,

ஞானசம்பந்தர் 'நம் பொருள் நம் மக்கள்' என்னும்போதும், 'தம் பொருள் என்பதம் மக்கள்' எனும குறளே நினைவாகும்.

இவ்வாறே இராவண காவியத்தின்

"அருவிய முருகிய
மார்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை
பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித்
தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம்
மருண்டு நோக்குமால்"

என்னும் பாடல் (தமிழகக் காண்டம். தமிழகப் படலம். பாடல்-33) நமக்கு அகநானூற்றுப் பாடலை (82) நினைவிற் கொணர்கின்றது. காதல் கூர் பனுவல் பாடும் கபிலன் அவ்வகப் பாடலில் அழகியதோர் குறிஞ்சிக் காட்சியை வைக்கின்ருன். அதன் பிழிவே மேலுள்ள பாடல்.

திருவிளையாடற் புராணம் மாணிக்கம் விற்ற படலத்தில் வரும் செய்தியொன்றைச் சுருக்கமாக எழுத வந்த திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்,

"தழைத்துக் கழுத்து
வளைந்த மணிக்கொத்துஞ்
சுமந்த பாஞ்சாலிக்குளிர்
முத்தினுக்கு விலையுண்டு"

என்றெழுதுகின்றது. இதனையே அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்,

"கண்டக மகிழ்ந்தொரு
வானுற விளைந்தொளி
கலந்தொளி காய்றகதிர்"

என்று இன்னமும் சுருக்கமாகக் குறிக்கின்றது.

பலவற்றிற்கும் இலக்காகி நின்ற கொங்குதேர் வாழ்க்கை என்னும் குறுந்தொகைப் பாடல் என்ன பொருண்மையைக் கொண்டு முகிழ்த்ததோ - அதே பொருண்மையிலேயே புலவர் குழந்தை தன் மானப் பெருங்காவியத்திலே ஒரு பாடலை இசைக்கிருர்.

"அழகிய சிறகைக் கொண்ட தும்பீ! மலர்கள் தோறும் சென்று, மதுவையுண்டு, தாதுவை அளைந்து வாழும் வாழ்க்கையினை உடையை நீ! எனவே உனக்கு எல்லாப் பூக்களின் மணமும் தெரியும். உண்மையாகச் சொல். என் தலைவியின் கூந்தலைக் காட்டிலும் மணமுள்ள பூவினை நீ கண்டதுண்டா ?" என்பது அக்குறுந்தொகைப் பாடலின் கருத்து. இதே கருத்தும் தோரணையும் கொண்ட பாடல் இராவண காவியம். 2. இலங்கைக் காண்டம். 3. காட்சிப்படலம். பாடலெண். 29. காண்க.

"போது போதாய்ப் போயூதிப்
பூந்தா துண்ணும்
பொறிவண்டே!
மாதர் கூந்தல் போலுள்ள
மணக்கும் பூநீ கண்டாயோ?
....
.......................நீ புகல்வாயே!"

அதற்கும் இதற்கும் என்ன வேற்றுமை; நடை வேற்றுமையைத் தவிர்த்தால்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது முந்தையப்பாடல். பின்னது இன்றையப் பாடல். இறையனுரை நாம் சந்திக்கமுடியாது; ஈரோட்டுப் பவானியிலே இன்று நாம் குழந்தையோடு உலாவலாம். என்ருலும் ஒற்றுமை!

இன்னும் எவ்வளவோ உண்டு ஒற்றுமையை எடுத்துக்காட்ட. ஒரு சில காண்போம்.

பெண்ணொருத்தியின் அழகு பிற பெண்களேயே அவள்மேல் காதல் கொள்ளச் செய்கின்றது; அவளைத் தவிரப் பிறபெண்கள் அத்துணைப் பேரும் நாம் ஆணுக இல்லேயே என்று ஏங்குகின்ருர்களாம்; இது கருத்து. இதை ஒவ்வொரு புலவனும ஒவ்வொரு வகையில் அமைத்துத் தான் தான் உயர்ந்தவனுக, சொல்ல வேண்டியதையும் சொல்லவந்ததையும் சரியாகச் சொல்லியவனுக ஆகத் துடிக்கின்ருன். பாருங்கள்.

'பெண்டிரும் ஆண்மை
வெஃகிப் பேதுறும்'

என்ருன் திருத்தக்கதேவன்.

"தாக்கணங்கும் ஆணவாம்"

என்ருன் குமரகுருபரன்.

"பெண்ணுக்குப் பெண்
மோகங் கொள்ளும்"

என்ருன் திரிகூடராசப்பக்கவிராயன்.

'கண்ட, பெண்பிறந்தேனுக்
கென்ருல் என்படும் பிறருக்கு ?"

என்ருன் கம்பநாடன்.

இவர்கள் நால்வருமே ஒருவருக்கொருவர் போட்டி இடுகின்றனர். இங்கே கள்ளத்தனம் செய்தவர் யார் என்ற கேளவிக்கே இடமில்லே. சிறப்பாகச் சொன்னவர் யார் என்பதே இங்குக் கேள்வி. இதை அன்பர்களிடமே விட்டுவிடுகிறேன்.

புலவர் குழந்தை அவர்களின் நெருஞ்சிப்பழத்தில் இரண்டு வரிகள்,

"கேடோட்டி,
நல்லனசெய் வாரென்று
நாட்டுமக்கள் தேர்ந்தெடுக்க
அல்லனசெய் தேயலேக்கும்
ஆள்வார் போல்"

என வந்து நமக்குப் பாலேக்கலியை நினைவூட்டுகின்றன.

குற்ருலக் குறவஞ்சியின் சில அடிகள் நமக்கு,

"கவட்டடிக் கயவாய் மேதி
கன்றுள்ளிப் பொழிந்த தீம்பால்
தெவிட்டவுண் டன்னந் துஞ்சும்
செழும்புனல்......"

என்னும் நைடதப்பாக்களேயும் அடிகளேயும் நினைவூட்டுகின்றன.

"செழுநீர்த் தடத்துக்கயல்
மிளிர்ந்தாலொப்பச்
சேயரிக்கண்
அழுநீர் துளும்ப
அலமரு கின்றன"

என்னும் திருவிருத்தம்-உ கலிங்கத்துப் பரணியின் 59-ம் பாடலே நினைக்கச் செய்கின்றது.

காம வெப்பத்தால் தாக்குண்டு கிடப்பவர்க்கு இரவு தொல்லே தந்து வேட்கையை மிகுதிப்படுத்தும். ஓர் இரவு செல்வது ஓர் ஊழி (யுகம்) கழிவதுபோலத் தோன்றும். இந்தக் கருத்தை இராசராச சோழனுலா 197-வது கண்ணியில்

"இன்றிரவை, ஊழிக்
குயில்காய்ந்து
ஒருபுலரி கூவிய
கோழிக்கே சோலே
கொடீரென்னும்"

என்று கூறுகின்றது.

இதைப் படிக்கும்போது நமக்கு "ஊழி பலவோர் இரவாயிற்ருேவென்னும்" எனவரும் நளவெண்பாவின் 1-108-ம் பாடலடியின் ஒற்றுமை நினைவிற்கு வருகின்றது.

பிரபுலிங்க லீலேயில் அக்கமாதேவி உற்பத்திகதியின் 24-ம் பாடலும், அக்கமாதேவி துறவு கதியின் 31-ம் பாடலும் திருக்குறட் கருத்துக்களின் பிழிவுதான். அக்கமாதேவி துதி கதி 31-ம பாடலோ புறநானூற்றைப் பிரதி பலிப்பதைக் காணலாம்.

மாயையின் உற்பத்தி கதியில் 14-ம் பாடலில் வரும் 'தாழ்ந்தோர் உயர்வரென்று மிக வுயர்ந்தோர் தாழ்வரென்றும அறஞ் சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்' எனும் அடிகள் "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்னும் குறளின் ஒளிநிழல் என்பதை யார் மறுக்க முடியும் ?

— 10-ம் பக்கம் —

புலவர் துரைமோகனன், வேலூர்.

கலைகின்ற கனவு, இது.

கருத்தோட்டம் செல்லுபடியாகாத காலகட்டம்- யதார்த்தவாதிகளுக்கு எதிராக வெகுஜனங்கள்- உளம்நோகும் உள்கட்சிப் போராட்டங்களும் குணதோச விமர்சனங்களும்- சீர்குலைவுக்காளான சீன-இந்திய உறவு; சிந்திப்பீர்! விடை தருவீர்!

இந்தியாவின் வட எல்லையிலேயிருந்து சோகச் செய்திகள் ஏராளமாக வந்துகொண்டுள்ளன. நாளைக்கு என்ன ஏற்படும் என்று எண்ணமுடியாத அளவுக்குத் துன்பக் கதைகள் பெருகி வருகின்றன. சீனப் படையினரின் அத்துமீறிய முறையும் நெறியும் கெட்ட செயல்களைப்பற்றிப் பேசி முடிப்பதற்கு முன்பே வேறு பல தரங் கெட்ட நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்கள் தினத் தாள்களிலே இடம் பெற்றுவிடுகின்றன. இந்திய-சீன எல்லைப் பிரச்னை, பல நாட்களுக்கு முன்பே, எதிர்பார்க்கப்பட்டதுபோல மிகவும் சிக்கலான சூழ்நிலையையும் செயல்படமுடியாமல் தத்தளிக்கும் கையாலாகாத தன்மையையும் உருவாக்கியுள்ளது. இந்திய சர்க்காரும் சீன சர்க்காரும் எல்லையோரங்களில் நடைபெற்ற துக்கமான நிகழ்ச்சிகளுக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார்கள். மிகவும் உள்ளந் தளர்ந்துபோன பிரதமர் நேரு தனது தழதழத்த குரலிலே கடுமையையும் கலந்து கண்டன உரைகளைத் தந்தார். இருந்தாலும் பொறுமையை இழக்காதீர் என, போதி மரத்தடியின் புதிய புத்தராகப் பேசினார். தன்னுடைய சர்க்காரின் தோல்வியை மறைக்க, சீனர்களின் அடாத செயல்களையெல்லாம் நட்பின் அடிப்படையிலே நடைபெறும் நல்ல காரியங்களெனக் கூறினார்! அவர் அனுதாப உணர்ச்சியுடன் அனுப்பி வைதத அஞ்சலுக்கு, சௌஎன்லாய் என்ற மூன்னாள கொரில்லாப் படைத் தலைவர் இன்றளவும் எந்த வகையான மறு மொழியும் தாவிலே நேருவின் கடிதம் மறு மொழி தரத்தக்கத் தரம்படைத்தது அல்ல என்றுகூட சீனப்பிரதமர் கருதியிருக்கலாம்; இதனைச் சரியென்று சொல்ல இங்கேயுள்ள செங்கொடி ஏசண்டுகளும் தலையாட்டலாம். பஞ்சசீலம் பேசுகின்ற பரந்தாமன்களும், பரந்தாமனின் பாதத்தில் மலர் சொரிந்து வணங்குவோரும் சீனப் படையினரின் தாசகுதல்களைக்கூடக் கணக்கெடுக்கமுடியாமல் கலங்கிக்கொண்டுள்ளனர். கல்கத்தா சென்றிருந்த நேரு செய்தியாளர்களிடையே பேசும்போது "நாங்கள் இன்னும் பொறுமையை இழக்கவில்லை. சீனா தன் தவறுகளைத் திருத்திக்கொள்ளுமென நம்புகிறேன்" என்றும் தெரிவித்தார்! இந்தியக் கம்யூனிஸ்ட்கள் நேருவின் விசாலப் பார்வையை வியந்து பாராட்டினர்; விசுவாசம் காட்டினர் சீனத்தவருக்கு!

இந்திய சர்க்கார் தன்னுடைய நட்புமுறையான முயற்சிகளுக்கு சீன சர்க்காரிடமிருந்து பதிலுரைகள் பெறமுடியவில்லை. ஆனால் பீகிங் ஆண்டு விழாவில் கலந்துகொண்ட இந்தியக் காம்ரேடுகள்தான் அங்குள்ள நிலவரங்களைத் தெரிவிக்கிறார்கள். கம்யூனிஸ்ட் அசய்கோசும் மற்றவர்களும், மாசேதுங்கையும் சௌஎன்லாயையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர்கள் இந்தியாவுடன் நேசம் பாராட்டவே விரும்புகிறார்கள்என்றும் சொல்லியிருக்கிறார்கள். சீனர்கள் - பஞ்சசீலத்தின் பெற்றோர்கள், இந்திய சர்க்காரை மதிக்கவில்லை. தங்களுடைய ஏசண்டுகளைத்தான் நம்புகிறார்கள்; அவர்களுக்குத்தான் அழைப்பு அனுப்புகிறார்கள்; அவர்களோடுதான் பேசுகிறார்கள்! காரணமென்ன என்றால் இந்திய சீன எல்லை விவகாரம் விவாதத்திற்கு வந்த வேலையிலிருந்து இந்தியக் கம்யூனிஸ்ட்கள் சீனாவுக்காகப் பரிந்து பேசி, சீனாவைக் கண்டிப்பவர்களையெல்லாம் அமெரிக்கக் கைக்கூலிகளாகவே சித்தரித்து எழுதிவைத்தார்கள். அதனையே இன்னும் செய்துகொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பத்திரிகைகளில் செய்திகளை வெளியிடும்போதெல்லாம் சீனாவின் புகழ் பாடித் தங்களின் பத்தினித் தன்மைகளைப் படம்பிடித்துக் காட்டிக் கொண்டார்கள்! இதிலும்கூட இவர்களின் மந்தபுத்தியை—மட்டரக எண்ணத்தைக் காட்டத்தவறவில்லை. நேரு பேசினார், சீனர்களின் கொடுஞ் செயலைப் பற்றி - அவரைக் கம்யூனிஸ்ட்களின் பேசத் தகுதிபடைத்த எந்தத் தலைவரும் அமெரிக்கக் கூலியென்று சொல்லவில்லை! நேருவின் பாணியிலே அசோக்மேத்தா பேசினால் அவரை மட்டும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையென்று சொன்னார்கள். அகில இந்தியத் தலைவர்கள் எனப்படும் அரிவாள் சம்மட்டிக்காரர்களைத் தோற்கடித்தார்கள், தமிழ் நாட்டிலே இருக்கும் ஜனசக்திக்காரர்கள். சீனத்தின் புனித எண்ணங்களையும் திபேத்தில் வியாபாரிகளை விரட்டியடித்த அருஞ்செயல்களையும் வெகுவாகப் பாராட்டினார்கள். சீனத்தின் அடாத செயல்களை மராட்டியக் கம்யூனிஸ்ட்கள் கண்டித்தார்கள். இந்தியப் பிறவிகளே எனச் சொல்லப்படும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் இந்தச் செய்தியைக்கூடத் தங்களுடைய பத்திரிகையில் வெளியிடவில்லை. கல்கத்தா கூட்ட முடிவுகளை டாங்கே எதிர்த்தார். இதனையும் துருப்பிடித்த ஈட்டிமுனைகளும் கலங்கிப்போன மூளைகளும் தெரிவிக்கவில்லை.

இந்திய சர்க்காரை ஆதரிக்க விரும்பாத கம்யூனிஸ்ட்கள்-சீனாவின் ஆதிக்க வெறிப்போக்கைக் கண்டிக்கத் துணியாத கம்யூனிஸ்ட்கள், எந்தத் திசையிலிருந்து தங்களைப் பற்றிய விமர்சனம் வந்தாலும் எல்லோரையும் ஏகாதிபத்தியங்களின் தூண்டுதலின் பேரிலேயே பேசுகிறார்கள் எனக் கூறிவிட்டார்கள். தங்களுடைய சுயசிந்தனையை விலைப்பொருளாக்கிவிட்டு, சீனாவின்மீதுள்ள விரகதாபத்தினால் இந்திய சீன எல்லை விவகாரத்தைத் தங்களுடைய காட்டிக்கொடுக்கும் தன்மைகளினால் மிகவும் விகாரமாக்கிவிட்டார்கள். சீனாவின் பத்தாம் ஆண்டு விழாவுக்குச் செல்ல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடநாட்டுத் தலைவர்கள் அத்தனைபேரும் துடித்திருக்கிறார்கள். தங்களது பெட்டி படுக்கைகளுடன் கல்கத்தா போய்ச் சேர்ந்தார்கள். சீனாவின் போக்கினைக் கண்டிப்பதில் டாங்கே, அசய்கோசு, சோசி ஆகிய மூன்று குழுவினருக்கும் ஏற்பட்ட கடுமையான கருத்து வேற்றுமைகளினால் சோசியை அழைத்துச் செல்லக்கூடாதென அசய் எனப்படும் அரும்பெரும் ஐந்தாம் படைத்தலைவர் முடிவு செய்தாராம்! பி. சி. சோசி இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளை மறந்து, சீனாவின்மீது தரப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முன்வரவில்லை! இத்தகைய மனிதர் பீகிங் சென்றால் நிலைமை கேவலமாகும் என்று கருதியே விமானத்தில் ஏறத் துடித்த அவரை விழியிலே நீர்வழிய வீடுதேடி ஓடும்படி விரட்டியிருக்கிறார்கள்! இந்த நிகழ்ச்சியைப் பத்திரிகைகள் கேலி செய்த பிறகு யாரோ ஒரு கட்சிப் பிரமுகர் தலைவர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லையென்று துணிந்து பொய் சொன்னாராம்! அசய்கோசு மாசேதுங்குடன் பேசியதைப் பெருமையாகச் சொல்கிறார்கள். உண்மையில் அவர் இந்திய மண்ணுக்கு நன்றியுடையவராக இருப்பின் மாசேதுங்கிடம் சொல்லியிருக்கவேண்டும். "என்னிடம் கூறுபவைகளைநேருவிடம்சொல்லுங்கள்!" என்று! சீனத்தின் விழாவுக்கு நீங்கள் நட்புடன் விரும்புவதாகச் சொல்லுகின்ற எங்கள் இந்தியாவை ஏன் அழைக்கவில்லை என்று கேட்டு, இந்தியாஇல்லாதஇடத்திலே நாங்கள் இருக்க விரும்பவில்லை என்று வெளியேறியிருந்தால், இவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்ற பழிச்சொல் மறைந்திருக்கும்.

இந்திய சர்க்காரின் அளவுகடந்த பொறுமை உணர்ச்சியை, பிரதமர் நேருவின் அனுதாபமும் அச்சமும் நிறைந்த அறிவுரைகளை, சீனக் கம்யூனிஸ்ட்கள் கோழைத்தனம் என்று எண்ணிவிட்டார்கள். தங்கள் என்ன செய்தாலும் எதிர்த்துத் தடுக்கும் ஆண்மை பாரதமாதாவின் புத்திரர்களுக்கு இல்லை என்பதை நன்றாகப் புரிந்துகொண்ட அவர்கள்தான் அக்டோபர் இருபதாம்நாளிரவு தங்களின் படைகளைத் தூண்டிவிட்டுத் துப்பாக்கிகளை விளையாடச் செய்தார்கள்! இந்தியப் படையினர் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பஞ்சசீலம் பேசுகின்ற சௌஎன்லாயின் படையினர் 17 பிணங்கள் அல்ல-10 பேர்கள்தான் என்று எண்ணிக்கையைக் குறைத்துக் கணக்கிட்டுக் கொள்வதினாலேயே சீனப் படையினர் செய்த கொடுஞ் செயல் மன்னிக்கத்தக்கதாகாது! ஐக்கிய நாடுகளின் அவையில் சீனாவுக்காக வாதாடிய வி. கே. கே. மேனன் சீனாவிற்குப் பல எச்சரிக்கைகளைத் தந்து பேசினார். சீனாவின் நல்ல செவிகள் இனியாவது இந்தியாவை உணரட்டும் என்று வேகமாக முழக்கமிட்டார்! இந்தியக் கம்யூனிஸ்ட்களின் அந்தரங்கத் தோழர் மேனனின் வார்த்தைகளைக் கேட்ட சீனக் கம்யூனிஸ்ட்கள் படைகளை அனுப்பிப் புதிய பரிசுகளாகப் பதினேழு பிணங்களைத் தந்துவிட்டார்கள்! மக்மகன் எல்லைக் கோட்டைப் பற்றி இன்னும் யோசிக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு வேண்டுகோள்விடுத்தது. ஆனால் சீனாவின் தலைவர்கள்இதனைக் கேட்கவில்லை! சீன-இந்திய நட்புறவு என்றும் வற்றாத சீவநதியைப் போன்றதென்று மாசேதுங் சொன்னாராம். அந்தக் கவிதை நயத்துடன் கூடிய செய்தியைக் கேட்ட அசய்கோசு மிக்கவும் நன்றி தெரிவித்தாராம். கம்யூனிஸ்ட்களின் மூலக் கடவுள் குருசேவ் என்ற விசித்திர மனிதர், சூயசுக் கால்வாய்த் தகராறு என்றவுடன் ராக்கெட் வாயிலாகக் குண்டு வீசுவேன் என்ற பேசிய சமாதானத் தூதர், இப்போது சீனாவைப் பார்த்து எந்த யோசனையும் சொல்லமுடியாமல் வேடிக்கை பார்க்கிறார்! பீகிங் நகரத்தில் அவர் தந்த ஆய்வுரைகளை லியூ-சோ-சி ஏற்றுக்கொள்ளவில்லை, இந்தோசீன எல்லை விசயத்தில் சோவியத்தின் யோசனை தேவையற்றதென்றே சொல்லிவிட்டார்கள். அடிமைப் பதிவேட்டில் பெயர் பொறித்திருக்கும்

கூடலரசன்

அசய்கோசு "மெயில்" பத்திரிகை படம் போட்டுக் காட்டியதுபோலவே குருசேவ்-மாசேதுங் இவர்களில் எவருடைய வாலாக இருந்து தலையாட்டுவது என்று தெரியாமல திண்டாடியிருக்கிறார். துப்பாக்கி வேட்டையைச் செய்தவர்கள் இந்தியப் படையினரே என்றும் ஜனசக்தி சொல்கிறது-ஆனால் செத்தவர்களின் எண்ணிக்கையைச் சொல்ல நவசீனச் செய்தி நிலையம் துணியவில்லை. அதனால் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களும் ஊமையானார்கள்!

இந்திய சர்க்கார் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைச் சொல்லிவிட்டது. எல்லையை மீறியவர் இந்தியரே என்கின்றனர் சீனப் படையினர். அங்கே பிடிபட்டும் உள்ளனர் போலீசார்! இந்தியாவின் அமைதியான பேச்சுக்களை மீண்டும் முடுக்கிவிட்டுள்ளது இந்தத் துப்பாக்கிச் சண்டை. இந்தியக் கம்யூனிஸ்ட்களைத் தவிர மற்றவர்கள் கட்சி வேறுபாடுகள் இன்றி இதனைக் கண்டிக்கத் தவறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு சீனாவின் கொலைகாரத் தன்மையை கண்டிக்கவில்லை; நேருவும் சௌஎன்லாயும் உடனே சந்திக்கவேண்டும்-எல்லைச்சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்றுதான் புதியது என்றெண்ணித்

தங்களது பழைய பாட்டையே பாடியிருக்கிறார்கள்! கேரளத்துக் கம்யூனிஸ்ட்கள் சந்தனத் தோப்பில் தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்ற போதும் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தது போலவே, சீனப்படைகள் சுட்டு வீழ்த்திய பிணங்களுக்காகவும் இதய ஆழத்திலிருந்து அனுதாபத்தைத் தீர்மானத்தில் காட்டிவிட்டார்கள். இப்போது நடந்துள்ள கொலைகளைப் பற்றிக் கண்ணீர்வடித்துக்கொண்டே, இனிமேல் இதுபோன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்க, சீனாவுக்கு எதுவும் சொல்ல முடியாதவர்கள் புதுடில்லி-பீகிங் சந்திப்புத் தேவை என்கிறார்கள்! இந்தியக் கம்யூனிஸ்ட்கள் ஒரே குரலில் பேச முடியவில்லை. டாங்கே என்ற கம்யூனிஸ்ட்களின் வணக்கத்திற்குரிய பெருந் தலைவர் சீனாவின் செயல்களைக் கண்டித்துவிட்டார்-தன்னுடைய அறுபதாண்டு நிறைவுவிழாக் கூட்டம் பம்பாயில் நடைபெற்றபோது கம்யூனிஸ்ட் கட்சியின் கல்கத்தாக் கூட்ட முடிவுகளைத் தவறானவை என்றும் மதிப்பிட்டுள்ளார். அவரைப் போலவே கிரேன் முகர்சி என்ற தலைவரும் கட்சியின் தவறான போக்கினை விளக்கியுள்ளார். பூபேசு குப்தா என்ற இன்னொரு தலைவரும் செயற்குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்! நம்பூதிரிபாத் என்ற சங்கரனும் மத்தியக் கமிட்டியை ஆதரிக்காமல், கருத்து வேற்றுமை இல்லை என்று குழப்புகிறார்! திடீர்க் கம்யூனிஸ்டாக சுவீகாரம் செய்துகொள்ளப்பட்ட வி. ஆர். கிருட்டிண அய்யர் என்ற கம்யூனிஸ்ட்களின் சட்ட மந்திரி, "எங்கே போகிறோம்? என்ன செய்கிறோம்? என்ன செய்யப்போகிறோம்? என்பவற்றிற்கு கம்யூனிஸ்ட்கள் இப்போது தெளிவாகப் பதில் கூற வேண்டும்" என்று கேட்டுவிட்டுக் கோழிககோட்டில் பேசிய அவர், சீனா சண்டைக்காகத் துணிந்தால் அதற்கு முழு அளவில் பதில் கிடைக்கும் என்றும் சொல்லியுள்ளார்! ஒரே கட்சியின் தலைவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் கம்யூனிஸ்ட்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட்களில் அசய் கோசு, ரனதிவே, சோசி என்ற முப்பெரும் மனிதர்கள்தான் சீனாவின் படையெடுப்பை, பாதைகள் அமைத்துக்கொண்ட கள்ளத்தன்மையைப் பாராட்டுகிறார்கள்! கம்யூனிஸ்ட் தலைவர்களைப் பாராட்டுவதே இலட்சியம் எனச் சொல்லிக்கொண்டிருக்கும் 'பிளிட்ஸ்' என்ற ஏடு, தன்னுடைய தலையங்கத்தில் கம்யூனிஸ்ட்களின் நிலையை 'முட்டாள்தனமான முடிவு' என்று எடுத்துக்காட்டியுள்ளது. கட்சியின் பொதுச்செயலாளர் இதற்கென்ன மறுமொழி தரப் போகிறார்? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பட்டியலிலே இடம்பெற முடியாமல் தவிக்கும் தீவிரத் தொண்டர்களான தமிழ்நாட்டு ராமமூர்த்தியும், சீவானந்தமும தங்களின் திசை மாறிய தலைவர்களையெல்லாம் திரும்பிப் பார்க்க மறந்துவிட்டு, சீனாவின் சாதனைகளைக் கணக்குப் போடுகிறார்கள்! டாங்கே தெரிவிக்கிறார் "சீனாவின் ஆதிக்கவெறியைக் கண்டிப்பது எனது உரிமை-சுதந்திரம்" என்று. அவருடைய பாராளுமன்றப் பேச்சைக்கூடத் திரித்து, மாற்றங்கள் செய்து கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வப் பத்திரிகையான 'நியூஏஜ்' வெளியிட்டதாக வேதனையோடு சொல்லியிருக்கிறார்! அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் டாங்கேயைக் கவிழ்க்க எப்போதும் தயாராக இருக்கும் பி. சி. சோசி என்பதையும் மறந்துவிடமுடியாது. டாங்கேயின் தொண்டர் ராமமூர்த்தி பேசுவதைக் கேளுங்கள்:-"உள்நாட்டில் உள்ள குழப்ப நிலையை மறைக்க, கேரளாவில் நடந்த அநீதியை மூடி மறைக்கச் செய்யும் ஒரு நாடகமே, சீனப் பிரச்னை. சரியான அளவில் சர்வே செய்யப்படாமல் மக்மகன் என்ற ஒருவரால் மானசீகமாக வரையப்பட்ட ஒரு எல்லையை வைத்து இன்று தகராறு செய்கிறார்கள்." அக்டோபர் பத்தொன்பதாம் நாளில் மாயூரம் உணவு இயக்க அணிவகுப்பில் பி. ராமமூர்த்தி இப்படி அறைகூவல் விட்டதாக 'ஜனசக்தி' தெரிவித்துள்ளது. சர்வதேசிய, தேசிய வித்தகர் ராமமூர்த்தி எதையோ நினைத்து என்னவோ பேசியிருக்கிறார் என்றே எவரும் சொல்வர். டாங்கே சொல்லிய பிறகு ராமமூர்த்தி இப்படிப் பேசியிருக்கிறார் என்றால் நிச்சயமாகத் தன் கருத்தோட்டத்தில் தடுக்கி விழுந்திருக்கிறார் என்ற உண்மை புலப்படுகின்றது. மராட்டியக் கமிட்டியும் அங்கேயுள்ள கம்யூனிஸ்ட்களும் ராமமூர்த்தியின் இந்த அரிய யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இவர் பண்டிதரையும் கிருபாளினியையும் பார்த்து, எங்கள் தீர்மானம் உங்களுக்கேன் கசக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் கேரளத் தேர்தல் வரப்போகும் வேளையில் சீனா துப்பாக்கிகளை வைத்து விளையாடியிருப்பது குறித்துப் பெரிதும் துன்பப்படுகிறார்கள். சீனாவின் வெறிச் செயல்களை வீடு வீடாகச் சொல்லிவிடுவார்களே எனப் பயந்து சாகிறார்கள். ஆனால் ராமமூர்த்தியெனப்படும் அதிசயத் தோழர்தான் தன் அனுபவத்தை மறந்து அவசரத்திலே பேசியிருக்கிறார், கேரளாவை மறைக்கத்தான் சீனத்தின் பிரச்னையென்று. இவரையும் பின்னுக்கு இழுத்துவிட்டு முன்னேறிவிட்டார் புதுவை நகரத்துப் பெட்ரோல் வீரரும், கம்யூனிஸ்டுமான சுப்பையா. "உணவுப் பிரச்னையிலிருந்து கவனத்தை மாற்ற, திசை திருப்பிவிட, இந்திய சீன எல்லைப் பிரச்சினையைப் பெரிதுபண்ணிப் போர் வந்துவிட்டது போலக் கூக்குரலிடுகிறார்கள்"-இதுதான் அந்தப் பேரறிஞன் செங்கற்பட்டில் சொன்ன பொன்மொழி. இதனைக் கூட்டத்திலேயிருந்து கேட்டவர்கள் திகைத்துப் போயிருப்பார்கள். ராமமூர்த்தியும் சுப்பையாவும் தங்களுடைய வடநாட்டுத் தலைவர்கள் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இப்போதாவது ஒரு தடவை கேட்டுப் பார்க்க வேண்டும். "உத்தர பிரதேச எல்லையில் சீனர்கள் பனி மூடிப் போன ஒரு பழங் கணவாயைக் கைப்பற்ற இரவும் பகலும் மிகவும் வேகமாக வேலை செய்திருக்கிறார்கள்; சீன விமானங்களில் துருப்புகள் எல்லை மீறிப் பறந்து வேவு பார்த்துச் செல்கின்றன; 'இந்திய மண்ணிலிருந்து வெளியேறு' எனச் சீனாவுக்கு மேனன் எச்சரிக்கை; புது ஆகரமிப்பில் இறங்கியதற்குக் கண்டனம்; இந்தியா-சீனா உறவு மேலும் சீர்குலைந்தது எனப் பிரதமர் நேரு அறிவிப்பு; சமரசப் பேச்சுத் துவங்குமுன் அதிகப் பகுதியைக் கைப்பற்றிக்கொள்ளச் சீனர்களின் ஆவல்; பீகிங்குக்கு மீண்டும் இந்திய சர்க்காரின் ஆட்சேபணைக் குறிப்பு; கம்யூனிஸ்ட் சீனாவிடமிருந்து பொருளாதார உதவி இல்லை"—இவையெல்லாம் தினத்தாள்களில் கண்ட செய்திகளின் சுருக்கம், எந்தப் பத்திரிகையும்-ஜனசக்தியைத்தவிர, தோழர்கள் ராமமூர்த்தியும் சுப்பையாவும் சொன்ன அற்புதக் காரணங்களைச் சொல்லவில்லை. சீனாவின் மீதுள்ள தங்களின் பக்தி மனப்பான்மையை மறந்துவிடக் கூடாதென்பதற்காக இந்த ஐந்தாம் படைத் தன்மையையும் தங்களுடன் சேர்த்துக்கொள்வதேன்? சீனாவின் செயல்களை ரசியா வெளிப்படையாக இன்னும் ஆதரிக்கவில்லை. பீகிங் விழாவில் குருசேவ் தன் குறும்புச் சேட்டைகளைச் செய்து கூட்டத்தவருடன் இரண்டறக் கலக்கவில்லை, சீனாவின் தகராறுகள் கிளப்பிய சிக்கலினால்! பாபம், தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களே! நீங்கள் யார் வழி? டாங்கே வழியா? ராமமூர்த்தி வழியா? ஒரே வழி காணுங்கள்!

இந்திய-சீன எல்லையோரப் பிரச்னைகள் இந்தியக் கம்யூனிஸ்ட்களைப் பலவகைகளிலும் பங்கப்படச் செய்துவிட்டன. சொந்தக் கொள்கைகளை உருவாக்காமல், தங்களின் இருப்பிடத்து நலன்களை மதிக்காமல்-வெளிநாட்டுக்காகப் பணியாற்றும் எவருக்கும் இத்தகைய இழிநிலைகள் வருவது இயல்புதான்! நவசீனத்தின் செய்திகள்தான் கம்யூனிஸ்ட்களுக்குத் தேவையென்றால், அவையே சரியென ஒப்புக்கொள்வதும் உண்மையென்றால், சீனாவுக்காக இங்கேயுள்ள கம்யூனிஸ்ட்கள் தீவட்டி பிடிக்கிறார்கள் என்று நேரு சொல்லும்போது உள்ளங்கொதிப்பது எதனால்? நவகேரளத்தின் நம்பூதிரிபாத் அலகாபாத்திலிருந்து அவுரங்காபாத் வரை வரவேற்கப்படுகின்றார். கேரளத்தில் எங்கள் வெற்றி உறுதியென்று பேசுகின்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் சீனக் கலவரத்தினால் பாதிக்கப்படுவோம் என்று பயப்படுவதேன்? 1942-ல் இந்தியாவை வெளிநாட்டார்க்குக் காட்டிக் கொடுத்தவர்கள் கம்யூனிஸ்ட்களே என்று இந்திராதேவி சொல்ல, அதனையே அவர்தம் தந்தையாரும் சொல்லிச் சொல்லி உங்களைக் கேலி செய்ய, இடம் தருவானேன்? உருக்குப்போன்ற கட்சியின் பெருந்தலைவர்கள் எங்கெங்கோ சிதறி ஓடுவதைக் கண்டபிறகாவது தமிழ்நாட்டுத் தலைவர்கள் தங்களின் தரம் உயரும் வகையில் செயல்படக் கூடாதா? இங்கேயுள்ள வெங்கட்டராமன் சொலலமுடியாத - சொல்ல நினைக்காத - சொல்லத் துணியாத கருத்துக்களையெல்லாம், சாதாரண வடநாட்டுக் கம்யூனிஸ்ட்கள் பேசிச் சாதிக்க முடிகிறதென்றால் அகில இந்தியக் கட்சியின ஒற்றுமைப் பண்பு வளர்க்கும் அருங்குணங்கள் எங்கே? கல்யாணசுந்தரம் தற்போது நடமாடவில்லை. கம்யூனிஸ்ட்களே புகழ்ந்து வாரி அணைத்துக்கொள்ளும் 'நியூஏஜ்' ஏதாவது பேசுகிறதா? அடக்குமுறைக்காலத்தில் தொண்டர்களைத் தவிக்க விட்டு விட்டுத் தலைமறைவாகஓடிவிட்ட வங்கத்து சோதிபாசுவைக்கூட 'ஜனசக்தி' மறப்பதில்லையே! வடநாட்டுக் கம்யூனிஸ்ட்கள் வைத்துள்ள உரிமைப் பிரச்னைகளை, இந்திய சீன எல்லையிலிருந்து, தனிநாடு, மொழிப்பிரச்னை இறுதியாகக் கேட்டுப் பெறும் சுயவுணர்வு தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்குக் கட்டாயம் வந்தாக வேண்டும்! டாங்கே சொல்வது சரியா - அசய் கோசு சொல்வது சரியா? கிருட்டிணய்யர் சொல்வது சரியா - ரணதிவே சொல்வது சரியா? கொள்கைக் குழப்பத்திலே மயங்கி நிற்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களே, தயைசெய்து விடை தருவீரா? ★

கவிஞர் குழு-சுற்றுலா.

சென்னை, அக் 26-சென்னை நக்கீரர் கழகத்தின் சார்பில், 25-10-59 தேதி ஞாயிறு காலை 7-30 மணிக்கு கவிஞர் குழு ஒன்று டாக்டர் **திரு அ. சிதம்பரநாதன்** எம்.எல்.சி தலைமையில் மாமல்லபுரத்திற்குச் சென்றது. கவிஞர் குழுவில் சுமார் 38 கவிஞர்களும், கல்லூரித் தமிழ் மாணவர் மன்றம், நக்கீரர் கழகம், ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றம், மாநகராட்சி மன்ற உறுப்பினர், பதிப்பக உரிமையாளர்கள் முதலியவர்களும் கலந்துகொண்டனர்.

கவிஞர் குழு மாமல்லபுரத்திற்கு காலை 11 மணிக்குச் சேர்ந்து கடற்கரைக் கோயில் அருகே உள்ள சவுக்குத் தோப்பில் கூடியது. நக்கீரர் மன்றத்தின் தோற்றம், வரலாறு முதலியவற்றையும், இச்சுற்றுலா ஏற்பாடு குறித்தும், சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்த **திரு. சிறுவை மோகனசுந்தரம்** அவர்கள் விளக்கிப் பேசினார்கள்.

டாக்டர் **திரு. அ. சிதம்பரநாதன்** தலைமையில் 56 பேர்களும் அறிமுகம் செய்துகொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பிறகு பேராசிரியர் **மயிலை சீனிவேங்கடசாமி 'மாமல்லபுரம் குறிப்பு'** என்ற தலைப்பில் மாமல்லபுரம் வரலாற்றை அனைவருக்கும் விளக்கினார்.

பின்னர் கவிஞர்கள், எழுத்தாளர்கள், புலவர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் அளவளாவிக்கொண்டு **மயிலை சீனிவேங்கடசாமி** சிற்பக் காட்சிகளைப்பற்றி விளக்கங்கள் கூறிக்கொண்டு செல்ல, அவரைச் சூழ்ந்து எல்லோரும் ஒவ்வொரு சிற்பமாகப் பார்த்துக்கொண்டு சென்றனர்.

அதன் பிறகு மாலை 4-45 மணிக்குக் கவியரங்கம்நடைபெற்றது. கவியரங்கில் **திரு. சாமி. பழனியப்பன்** 'வள்ளுவரை'ப் பற்றியும், **திரு. கோவைஇளஞ்சேரன்** 'இளங்கோ'வைபபற்றியும், **திரு. நாக. முத்தையா** 'ஔவையார்'பற்றியும், **திரு. மா. பிள்ளையார்** 'கம்பலைப' பற்றியும், **திரு. நாரா. நாச்சியப்பன்** பாரதியாரைப்பற்றியும், **திரு. சுப. இளங்கோவன்** "பாரதிதாசன்"பற்றியும், **திரு. மகிழ்நன்** கவிமணி 'தேவி'பற்றியும் கவிதைகள் புனைந்து அரங்கேற்றினர்.

திரு. கு. சித்தா அவர்கள் இன்றையக கவிதை உள்ளத்தை விளககினார். திரு. கே. எம். கே. **அப்துல் காதர்** அவர்கள் வசன கவிதை, இலக்கியக் கவிதை ஆகியனபற்றி விளக்கம் தந்தார். திரு. கோவை இளஞ்சேரன் கவிஞர் மன்றம் ஒன்றமைக்க வேண்டிக் கொண்டார். **திரு. அழ. வள்ளியப்பா** கவிதையரங்கைப் பாராட்டினார்கள். **நாக. முத்தையா** நன்றியுரைத்தார்.

அனைவரும் இரவு 9-15 மணிக்கு, சென்னை வந்து சேர்ந்தனர்.

திறனாய்வு ஒரு கலை

''திறனாய்வு'' என்ற சொல் தமிழ் நாட்டில் புதிதாக வழங்கப்படும் ஒரு சொல்லாகும். இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இச்சொல்லைத் தமிழில் காணமுடியாது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் இச்சொல் தமிழில் புகுந்திருக்க வேண்டும். "Criticism'' என்ற மேலை நாட்டுச் சொல்லிற்கு இணையாக இது தமிழில் வழங்கப்படுகிறது.

'திறன்' என்ற சொல்லிற்குத் தமிழ்ப் பேரகராதி தரும் பொருள்- கூறுபாடு, கோட்பாடு, இயல்பு ஆகும். 'ஆய்தல்' எனப்படுவது, சோதனை செய்தல்-ஆலோசித்தல்-தெரிந்தெடுத்தல். திறன் + ஆய்தல் = திறனாய்தல். ஆகவே திறனாய்தல் என்பது அழகுக் கலைகளின் கூறுபாட்டை-இயல்பைச் சோதனை செய்து, தெரிந்தெடுப்பது. முதற்சொல்லின் பொருளும், பொலிவும் குன்றாது தமிழில் வழங்கும் புதுச் சொல் இது.

பேராசிரியர் க. அன்பழகன் கூறுவதைக் கேளுங்கள்:—

"தமிழில் திறன் ஆய்வு அண்மையிலேயே கால்கொள்வதாயிற்று. அதன் வளர்ச்சியை ஒட்டியே கவிஞரின் சீரும் சிறப்பும் புலனாவதாகும். புடமிட்ட தங்கமென, தீட்டப்பட்ட வைரமென புலமை ஒளி உமிழ்வதாகும். பிறநாட்டுப் பெருங் கவிஞர்களுடன் நமது கவிஞர்களை ஒப்பிட்டுக் காண்போர்க்கே அவர்தம் கற்பனை வளனும் கருத்து மாட்சியும் புதுமை நாட்டமும் புரட்சி மனமும் புலனாகும். எனவே இத்தகு திறனாய்வு ஏடுகளின் மலர்ச்சி வேண்டப்படுவதாகும்''

"கலை'' என்ற சொல் பழங் காலத்தில் அழகைப் படைப்பதற்கு, செயல் வன்மையைக் காட்டுவதற்குச் சுவை பயப்பதற்கு உதவும் அறிவையும் ஆற்றலையும் குறித்தது. காலம் செல்லச் செல்ல அதன் பொருள் விரிவடைவதாயிற்று. தற்காலத்தில் "திறமையுடன் வியப்பிற்குரிய முறையில் செய்வது'' எல்லாம் கலையாகவே கருதப்படுகிறது.

திறனாய்வு கலையே; திறனாய்வாளனும் கலைஞனே. கல்லிற்கு உயிர் கொடுக்கும் சிற்பியும் அவனே; கற்பனைக்கு உருவம் தீட்டும் ஓவியனும் அவனே; காவிய உலகைப் படைக்கும் புலவனும் அவனே. பல கலை கற்றவனே திறனாய்வாளன்! புலவனும், சிற்பியும் ஓவியனும் செய்யமுடியாதவைகளை இவன் செய்து காட்டுவான். சொற்பெருக்கால் கலைகளைப் படைத்து மக்களை மகிழ்விப்பான். கலைஞன் படைப்பான் (Inventive Artist). திறனாய்வாளன் விளக்குவான் (Explanatory Artist). கலைஞன் தங்கச் சுரங்கம்; திறனாய்வாளன் அதைத் தோண்டியெடுத்து, மக்களுக்குப் பயன்படும்படி ஆக்கித் தரும் கூலியாள். கலைஞன் தென்பாண்டிக் கடல் முத்து. மூச்சைப் பிடித்து மூழ்கி, உயிரைத் துச்சமென மதித்து முத்துக் குளிக்கும் தமிழ் மறவன், திறனாய்வாளன்.

உணர்ச்சிகளின் வழியாக ஆராயப்படும் கலைகள், அறிவின் வழியாக ஆராயப்படும் கலைகள் எனக் கலைகள் இரு வகைப்படும். உணர்ச்சிகளின் மூலம் அறிவைத் துணையாகக் கொண்டு ஆராய்வது தான் "திறனாய்வுக் கலை.''

திறனாய்வாளன் பல துறையிலும், அறிவு பெற்றிருப்பான். வேறு வேறு இலக்கியத் தேர்ச்சியும், வீட்டுமொழிப் புலமையும்வாய்க்கப் பெற்றிருப்பவனே சிறந்த திறனாய்வாளனாகத் திகழமுடியும். சாகாத தன்மை பெற்ற இலக்கியங்களையும் அவன் பயின்றிருப்பான்; அதே சமயம் குப்பை கூளங்கள் என்று ஒதுக்கித் தள்ள வேண்டியவைகளையும் அறிந்திருப்பான்.

இலக்கியப் பயிற்சி மாத்திரம் ஒருவனைச் சிறந்த திறனாய்வாளன் ஆக்கிவிடாது. அவன் தான் பயின்றவைகளை, தன்னுடைய எழுத்துக்களில் எதிரொலிக்க வேண்டும். தன்னுடைய உள்ளத்தில் பிறருடைய படைப்புகள் எழுப்பும் உணர்ச்சி அலைகளைப் பிரித்துக் காட்ட வேண்டும்.

சுகாட் சேம்சு என்பான், தான் எழுதிய "இலக்கியத்தைப் படைத்தல்'' என்ற நூலில் இவ்வாறு கூறுகிறான்:—

"பொறியியலைப் பற்றி ஆராய்ச்சி செய்பவன், ஒரு பொறியியல் வல்லுனனாகத்தான் இருப்பான்; தோட்டக் கலையைப் பற்றி ஆராய்ச்சி செய்பவன் ஒரு சிறந்த தோட்டக்காரனாகத்தான் இருக்க முடியும். அதேபோல் கவிதையை ஆராய்பவன் ஒரு சிறந்த கவிஞனாகத்தான் இருக்க வேண்டும். இதை நான் கூறவில்லை. சிறந்த பல அறிஞர்களின் வாழ்க்கையே கூறுகிறது. டிரைடன், கதே, ஆர்னால்டு போன்றவர்கள் புலவர்களாகவும் பணியாற்றியிருக்கிறார்கள்...''

ஒரு திறனாய்வாளன், தான் ஆராய்ச்சி செய்வதற்கு எடுத்துக் கொண்ட நூலோடு தன்னை ஒன்று படுத்திக்கொள்ளவேண்டும். நூலாசிரியனுக்கு இருக்கும், உணர்வு சக்தி (Perception) நெஞ்சறிவு (Awareness) முதலியன திறனாய்வாளனுக்கும் இருக்க வேண்டும். திறனாய்வாளன் தான் ஆராயப்புகும் அழகுக்கலைகளில் மறைந்து கிடக்கும் கலைஞனது நெஞ்சத்தைக் காணவேண்டும். "புலவன் தன்னுடைய உள்ளத்தை ஓவியமாகத் தீட்டுபவன்.'' (The poet is the painter of the soul) கவிஞனது வாழ்க்கையே பெரும்பாலும் அவனது படைப்புகளில் அமைந்து விளங்கும். ஆகவே திறனாய்வாளன், கவிதைகளை ஆராயப்புகுமுன் புலவர்களை அறிந்திருப்பது மிகவும் இன்றியமையாதது. புலவனை அறிந்தவன் அவனது கவிதைகளை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். இலக்கியத் திறனாய்வாளனுக்கு அமைந்திருக்க வேண்டிய பண்புகளில் இது மிகவும் முக்கியமானது.

திறனாய்வாளன் புலவர்களுக்கும், மக்களுக்குமிடையே ஒருவிதமான தொடர்பை ஏற்படுத்துகிறான்; பாலம் போலமைந்து இருபாலரையும் இணைக்கிறான். எல்லோரும், எல்லாப் பெரு நூல்களையும், படித்தின் புறுவது இயலாத காரியம். அதற்குரிய வசதியும், வாய்ப்பும் இன்றைய 'இயந்திர உலகில்' கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. இந்த நிலையில் நல்ல இலக்கியங்களை வளர்க்கவும், போலி இலக்கிய வளர்ச்சியைத் தடுக்கவும் திறனாய்வாளன் ஒருவனால் தான் முடியும். நல்ல இலக்கியங்களுக்கு ஆதரவு தேடவும், அவைகளை மக்கள் போற்றிப் பேணவும் வழி வகைகள் செய்து தருபவனும் திறனாய்வாளன்தான் - ஆகையால் அவன் பரந்த நூலறிவும், விரிந்த மனப்பான்மையும், சிறந்த சுவைத் தன்மையும், நேர்மைத் திறனும், நெஞ்சத்துணிவும் உடையவனாக இருக்கவேண்டும். ஒரு பக்கம் மக்கள்; மறுபக்கம் திறனாய்வாளன். திறனாய்வாளனும் மக்கள் கூட்டத்தில் ஒருவன்தான். ஆனால் அவன் கலைஞன் உருவாக்கும் கலைப் பொருட்களின் கற்பனைத் திறத்தையும், ஏற்றத்தாழ்வுகளையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவன்!

அண்ணா அவர்கள் சில காலத்திற்குமுன் அறிவுரை தந்தார்கள்:-

"கிளிஞ்சல்களையும், சங்குகளையும், பலவண்ணத்தில் அணிகளாகவும், மணிகளாகவும் செய்து ஆரணங்குகளுக்கு அழகு செய்வதுபோல தமிழ் இலக்கியத்தைத் தமிழ்த்தாய்க்கு அணிகளாகவும், மணிகளாகவும் செய்து சூட்டவேண்டும். இன்னபொருளைக்கொண்டு இன்ன வளையல் செய்யலாம்; இதை இன்ன ஆபரணமாகச் செய்தால் இன்ன ஆரணங்கிற்குப் பிடிக்கும் என்பதை அறிந்து செய்வதுபோல, இந்தத் தமிழ் இலக்கியக் கருத்து எதற்குத் தேவை என்பதை ஆராய்ந்து அதற்குத் தக்க முறையிலே அதை பயன்படுத்த வேண்டும்...''

ஆம்; திறனாய்வாளன் இலக்கியப் பயிரில் மலிந்து கிடக்கும் களைகளை அப்புறப்படுத்த வேண்டும். நல்ல இலக்கியம் இவை என மக்கள் மன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும். போலி இலக்கியங்கள் ஈசல்கள்போலப் பெருகியிருப்பதன் காரணம், திறனாய்வுக்கலையின் வளர்ச்சியின்மையேயாகும். இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் திறனாய்வாளன் நெஞ்சத்துணிவோடு பணியாற்ற வேண்டும். தயவு, இரக்கம், அன்பு இவைகளுக்கு இடம் கொடுக்காமல், களத்திலே விளையாடும் மறவன் கைவாளென, அவனது பேனாமுனையிலிருந்து கிளம்பும் கருத்துக்கள் பகைவர்களாம், போலி இலக்கியக் கர்த்தாக்களைத் தாக்கவேண்டும். நல்ல இலக்கிய வளர்ச்சி, போலி இலக்கிய அழிப்பு-எரிப்பு முதலியன தாம் இலக்கியத் திறனாய்வாளனது தலையாய கடமைகளாகும்.

தமிழ்நாட்டில் இலக்கியம் பெருகியிருக்கும் அளவிற்குத் திறனாய்வு பெருகவில்லை. இந்தத் துறையில் தமிழறிஞர்கள் பணியாற்றவேண்டும். சிறந்த திறனாய்வு நூல்களை ஆக்கி உலகிற்குத் தரவேண்டும். இதுதான் இப்பொழுது செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்!...

-என். சிவம், பி. எஸ்சி.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழக அறிக்கை
எண் 4/59

மாணவர் கழகங்களை அமைப்பதற்கும், மாணவர் கழகங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும், மாவட்ட வாரியாகக் கீழ்க்கண்ட தோழர்கள் அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை அன்போடு மேற்கொண்டு செம்மையாகச் செய்து வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சென்னை மாவட்டம்

1. என். வி. என். சோமு. [பி.ஏ.]
2. ஈ. கிருட்டினன் [பி. ஏ.]
3. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், [பி ஏ. (ஆனர்ஸ்)]
4. வ. செல்வராசன்

செங்கல்பட்டு மாவட்டம்

1. பி. பாலசுப்பிரமணியம் [பி.ஏ.]
2. சி. என். ஏ. பரிமளம்

தென்னாற்காடு மாவட்டம்

1. இராசகுமார் பீட்டர் [பி. ஏ. (ஆனர்ஸ்)]
2. பூவை. நா. இராமாநுசம் பி. காம் (ஆனர்ஸ்), [பி. எல்.]
3. வி. வி. அறிவுடைநம்பி

தஞ்சை மாவட்டம்

1. சீர்காழி சோமசுந்தரம் பி. ஏ.
2. பி. வி. செழியன் [பி. ஏ. (ஆனர்ஸ்)]
3. இரா. இராமசாமி
4. கரந்தை கணேசன்

மதுரை மாவட்டம்

1. ப. நெடுமாறன் [பி. ஏ. (ஆனர்ஸ்)]
2. இந்திரசித் [பி. ஏ.]

கோவை மாவட்டம்

1. திரு. சு. ஆறுமுகம் பி. ஏ, [பி. எல்.] (துணைத்தலைவர், கோவை நகரசபை)
2. கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ. (ஆனர்ஸ்)[பி.எல்.]

சேலம் மாவட்டம்

1. இரா. வெங்கடேசன் [பி. ஏ. (ஆனர்ஸ்)]
2. வ. தென்னவன்

பெங்களூர்

1. கோ. இராமன்

மற்ற மாவட்டங்களின் அமைப்பாளர்கள் பெயர் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்,
பொதுச்செயலாளர்,
தி. மா. மு. கழகம்.

"எழிலகம்''
சிதம்பரம்
26-10-59.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

பத்தினி (கண்ணகி) வழிபாட்டிற்கு, காளி, பார்வதி போன்ற சக்தி வழிபாட்டிற்கும் வழி வகுத்தது என்று தீட்சதர் அவர்கள் கருதுகின்றார்.

புதுக்கற்காலம் : அடுத்து, புதுக் கற்காலத்தை நோக்குவோம். இக்காலம், கி. மு. 5000, அதாவது இன்றைக்கு 7000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இக்காலத்தைச் சார்ந்த புதை பொருள்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. திருநெல்வேலி, மதுரை, சேலம், பல்லாரி, கடப்பை, கர்னூல் ஆகிய மாவட்டங்களில் இக்காலத்தைச் சார்ந்த பல அரிய கற் கருவிகளும், இன்னபிற புதை பொருள்களும் கிடைத்துள்ளன. மற்றும இக்கால மனிதர்கள் வேளாண்மையில் ஓரளவு ஈடுபட்டு, அரிசி முதலிய தானிய வகைகளை உண்டாக்கினர் என்பதற்குக் குறிப்புக்கள் கிடைத்துள்ளன. இக்கால மக்களின் பழக்கங்களில் ஒன்று இறந்தவர்களைப் பெரிய பானைகளில் இட்டு, அவர்களுடைய கற்கருவிகளையும், இன்னும் சில உணவுப் பொருள்களையும் உடன் வைப்பதாகும். இப்பானை 'முதுமக்கட்தாழி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து அக்கால நாகரிகத்தைப் பற்றி நாம் நிறையச் செய்திகளை அறிய இயலுகிறது. மற்றும் முக்கியமாக, இக்கால மக்கள் கடவுளைப்பற்றிய சிந்தனையில் ஈடுபட்டிருந்தனர். அக்காலத்திலேயே இலிங்க வழிபாடு தோன்றலாயிற்று. பல்லாரி மாவட்டத்தில், கப்கல்லு (Kapgallu) என்ற இடத்தில், புதுக் கற்காலத்தைச் சார்ந்த, இலிங்கமும், அதனெதிரில் அமர்ந்துள்ள ஒரு காளையுமாக வரையப்பட்டுள்ள ஒரு நல்ல ஓவியம் கிடைத்துள்ளது. இதுவே சைவ சமயத்தின் துவக்கம் என்று கூறின் தவறாகாது. சைவ சமயம் இந்த நாட்டிலேயே தோன்றி வளர்ந்த ஒரு சமயமாகும். இருக்கு வேதத்தைப் புரட்டிப் பார்ப்பின், இந்தியாவில் குடியேற வந்த ஆரியர், இந்திரனையே தம் கடவுளாகக் கொண்டிருந்தனர் என்பதும், இலிங்கவழிபாடு செய்து வந்த பழங்குடி மக்களையும், அத்தெய்வத்தையும் 'சிஸ்ந தேவ' என்று இகழ்ந்து கூறியிருப்பதும் புலனாகும். ஆனால் சிறிது காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய அதர்வன வேதத்தில் இலிங்க வழிபாடு போற்றுதலுக்கு உள்ளாகிக் கடவுளர்களுக்கெல்லாம் தலைமைக் கடவுளாக மாற்றப்பட்ட நிலை நன்கு தெளிவாகும். அத்தகைய தலைமைக் கடவுளுக்கு ஏற்ற தலைவியாக, முன்னர் நாம் கண்ட நிலத் தெய்வம், சக்தி என்ற பெயரில் சிவனோடு இணைக்கப்பட்டு இருவரும் ஆரியர் உள்பட எல்லாருடைய தொழுகைக்கும் உள்ளாயினர். 'சிவ' என்ற சொல்லே 'செவ்' என்ற தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் தோன்றியதாகும். 'செவ்' என்றால் செம்மை என்று பொருள்படும். எனவே 'சிவனும்', 'சைவமும்' இந்த நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் போற்றிய கடவுளும் சமயமும் ஆகும் என்று கருதப்படுகின்றது.

திராவிடருக்குச் சொந்தமானதே சைவம் என்று நான் சொல்லுவதால், சிவனையே மீண்டும் தொழவேண்டும் என்று நான் கூறுவதாக யாரும் தயவு செய்து எண்ணிவிடக்கூடாது. ஒவ்வொரு நாட்டிலும் துவக்கத்தில் இப்படியே பல தெய்வங்களையும், விக்ரகங்களையும் தொழுது வந்து, பின்னர் நாகரிக வளர்ச்சியில் அவற்றை விடுத்து உருவமற்ற அருவ நிலையிலேயே கடவுளை வணங்கலாயினர். எனவே மனித இனத்தின் குழந்தை நிலையிலே தோன்றியனவே இக்கடவுள்களும், அவற்றிற்கேற்ற விக்ரகங்களும் ஆகும். அந்த வகையில்தான் பண்டைத் திராவிடத்திலும் பழங்குடி மக்கள் சிவனை வணங்கி வந்தனர், எல்லாவற்றிற்கும் மூலக்கடவுளாகப் போற்றினர். அதை உணர்ந்த ஆரியர்கள் அக்கடவுளை ஏற்றுக் கொண்டு, சமஸ்கிருதத்தில் சிவனைப் பற்றி சில புராணங்கள் இயற்றிவிட்டு. சிவனே தங்களுடைய தலைமைக் கடவுள் என்று போற்றத் தலைப்பட்டனர் என்ற உண்மையைத்தான் ஈண்டு எடுத்துக்கூற விழைகின்றேன். ஆரியருக்கு முற்பட்ட நாகரிகமான சிந்து சமவெளி நாகரிகம் (Indus Valley Civilisation) பரவியிருந்த மோகஞ்சதாரோ, அரப்பா ஆகிய புதையுண்ட நகரங்களினின்று கிடைத்த புதை பொருள்களில் ஒன்று சிவனுடைய உருவம் என்பது ஈண்டு உன்னத் தக்கது. இவ்வாறு சைவசமயத்தை மேற்கொண்டிருந்த பழங்குடி மக்கள், பின்னர் வந்த ஆரியரைப்போல ஆடு மாடுகள் முதலிய உயிர்களைப் பலியிட்டு, தம் தொழுகையை நடத்தவில்லை; மாறாக அன்பையும், பணிவையுமே தங்கள் சமயமாக மேற்கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

உலோக காலம் : புதுக் கற்காலத்திற்குப் பின்னர் தொடர்வது உலோக காலமாகும். உலகின் மற்ற பகுதிகளில் தொடர்வதற்கு முன்னரே தென்னகத்தில் உலோக காலம் துவங்கிவிட்டதென்றே பல புதைபொருள் வல்லுனர்கள் கருதுகின்றனர். தென்னகத்தில் முதலில் அங்குக் கிடைத்த இரும்பே கருவிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர், தங்கத்தின் அருமையை உணர்ந்த பிறகு அதையும் தென்னவர் பயன்படுத்தினர். தென்னவர், பசும் பொன்னையும், கரும்பொன்னையும் (இரும்பு), தாம் முதற்கண் பயன்படுத்தியதுடன் மட்டுமல்லாது உலகுக்கே முதலில் இவ்விரு உலோகங்களை அறிமுகப்படுத்தியவரும், விற்றவரும் ஆவர் என்று தீட்சதர் உள்பட பல வரலாற்றுப் பேராசிரியர்கள் கருகின்றனர். எகிப்து, பாபிலோனியா, ரோமநாடு, கிரேக்க நாடு ஆகிய பல நாடுகளிலும் தங்கத்தையும், மற்றும் பிற்காலத்தில், முத்து, பவழம், யானைத்தந்தம் போன்ற அரிய பொருள்களையும், மேலும் அரிசி, வாசனைத் திரவியங்களெனப்படும் மிளகு, ஏலக்காய், கிராம்பு முதலியவற்றையும் கடல் கடந்துசென்று விற்றுப் பெரும் பொருள் திரட்டி மீண்டனர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். ஆனால் இவ்வாணிபம் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே ஏறத்தாழ கி. மு. 4000 முதல் தொடர்ந்து நடைபெற்று வந்தது. என்பதே வி[illegible]க்கத்தக்க செய்தியாக உள்ளது.

(அடுத்த இதழில் முடிய[illegible]

ஆட்சிக்குழுத் தேர்தல்.

பேரன்புடையீர்,

வணக்கம். அண்ணாமலைப் பல்கலைக் கழக பதிவுபெற்ற பட்டதாரிகள் தொகுதியில் ஆட்சிக்குழு (செனட்) உறுப்பினராக போட்டியிடும் எனக்கு வாக்காளர்கள், முதல் வாக்கினை அளித்துதவி வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

தங்கள்,
க. அறிவழகன் எம். ஏ.,
(க. முத்தையன்),
பொருளாதார விரிவுரையாளர்,
சர். தியாகராயர் கல்லூரி,
சென்னை - 21.

புதுப் படம்! புதுமைப் படம்!

அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய, "கண்ணும் கண்ணும் [illegible] படத்தைக் கலைவாணர் பிக்சர்சார் தயாரிக்கின்றனர். முன[illegible] திரு. எஸ். ஏ. அய்யாசாமி தலைமை வகித்தார், தொடக்க[illegible] டாக்டர் திரு. மு. வ, காமிராவை முடுக்கினர். எண்ணற்[illegible] தந்திருந்தனர். அக்காட்சிகள் இவை.





—5-ம் பக்கத் தொடர்ச்சி—

"செல்லாமை யுண்டேல் எனக் குரை, மற்றுநின் வல்வரவு வாழ் வார்க்குரை" என்னும் குறளும், "வருவீர் ஆகுதல உரைமின் மன்னே......சென்றோர் மன்னென இருக்கிற்போர்க்கே" என்னும் அகம் 378-ம் ஒத்து இருப்பது காண்க.

'வேட்டார்க்கு வேட்டனவே போற்றினிய வேய்மென்தோள்" என்று சிந்தாமணி கூறுவதும், "வேட்டபொழுதின் அவையவை போலுமே தோட்டார் கதுப்பினாள் தோள்" என்று (1105) குறள் கூறுவதும் ஒன்றைத்தானே!

'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சுமுண்பர் நனிநாகரிகர்' என்னும் (355) நற்றிணையும், "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்னும் குறளும் ஒத்த கருத்தினவே.

'வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ' என்னும் கருத்து குறிஞ்சிப் பாட்டின் (206-207) அடிகளாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

திருக்கோவையாரின் 345-ம் பாடலும் 'வாளற்று' என்ற குறளும், பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தின் எட்டாம் பாடலின் 16, 17 அடிகளும் ஒரே கருத்தைத்தான் சொல்லுகின்றன.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும் கருத்தைத்தான் 125-வது நாலடியாரும், நிறைநீர என்னும் குறளும் முறையே வெண்பாவிலும் குறள் வெண்பாவிலும் வெளியிடுகின்றன.

"பற்று அவா அற்றவர் உற்ற வானவன்" என்று கோசிக முனியின் வாயால் வரும் (கம்பரா. தாடகை. 3) கருத்திற்குமூலம் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்னும் குறள். (350) இதையே 'நீராசை இன்றேல் தெய்வம் உண்டோ?' என்று மறு...லயாகத் தாயுமானவர் கேட்...ர். ஒரே கருத்தை மூவரும் ... வகையிலே வெளிப்படுத்து...னர். திருவாய் மொழியின் ...ம் திருப்பதிகத்தின் 5-6 ... இதைத்தான் சொல்...றுக்க முடியுமா?

...ால் மற்றுமென் நெஞ் ...ளித்தாங்கே' என்னும் ...கை, 1218-ம் குறளின் ... அல்லது கலியின் பகுதி ...க குறள் நிற்கிறதா என்று திகைக்கும் அளவிற்குக் கருத்தொற்றுமை இங்கேயும்.

"ஊமத்தந் தின்றாற் போல
உன்மத்தன் உருமுத்
தின்பான்"

என்பான் கம்பநாடன் (கம்ப. அதிகயை. 215). இவன் பிறரிடமிருந்தெடுத்தாண்டான் இக்கருத்தை. வியக்கும் ஒற்றுமையுடைய அதுனு? கண்டு சொல்லுங்கள். காத்திருப்பேன்.

"காதல் அஞ்சேன்
அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறி
தாகுவ தாயின்
மறக்குவென்கொல்என்
காலென் எனவே"

என்னும் நற்றிணையும்,

"இம்மை மாறி
மறுமை யாகினும்
நீயாகியரெங் கணவனை
யானாகியர்நின்
நெஞ்சுநேர் பவளே"

என்னும் குறுந்தொகையும் கூறும் இதே கருத்தைத்தானே மணிமேகலையும் 'காதலர் இறப்பின்' என்று கூறுகின்றது!

எந்தக்காலக் காதல்கட்டமாயினும் காதலர்களின் விருப்பமும் வேட்கையும் எண்ணமும் எழுச்சியும் இதற்கே அமைந்து காண்கின்றனவே! எந்த நாட்டுக் காதலர்களின் வேண்டுகோளும் இதுவாகவே இருக்கக் காண்கிறோம். இப்படியிருக்க இதை எந்த மடையனாவது 'காப்பி' என்றோ, 'கள்ளத்தனம்' என்றோ சொல்வானா?

உணர்ச்சியின் தலைசிறந்த நிலையம் காதல். அதன் மணிமுடியல்லவா மேலே கண்ட காதலைப் பற்றிய அந்த வாசகம்? உணர்ச்சிக்கு ஆட்பட்ட எல்லா மக்களிடத்தும் எந்த நாட்டினிடத்தும் இப்படித்தான் நின்று ஆட்சி செலுத்தும் இது தவறென்று சொல்லமுடியுமா? காதல் என்பது உணர்ச்சியின் ஓட்டம் என்ற ஒரே காரணத்தால்தான் உலகிலே காதல் இன்றளவும் அழியாது வந்திருக்கிறது. உலவும் கவிஞன் ஒவ்வொருவனும், உணர்ச்சிகளின் கவிதையாம் காதலைப் பாடிச் செல்கின்றான். காதலுக்குத் தடைதான் விதிக்க முடிந்ததா இதுவரையில்? முயன்ற எவனாவது வெற்றிதான் பெற்றதுண்டா? இல்லையே! காதல் மெல்லிது; அழகியது. ஆனால்அதுவே தன் தன்மையில் மாறும்போது? வலியதினும் வலியது காதல். கொடியதினும் கொடியது காதல். இந்த உலகமே அதன்முன் தூள் தூள். புது உலகை ஆக்கவும் செய்யும், அன்பால்; உள்ள உலகை அழிக்கவும் செய்யும், வன்மையால். மாந்தர் தலை குனிய வேண்டும் காதலுக்கு. இதைக் கவிஞன் ஒவ்வொருவனும் பாடத்தான் செய்வான். பாடுதல் தவறு என்று சொல்பவன் உலகின் - குறிப்பாகக் காதலின் பகைமையை விலைக்கு வாங்குகிறான் என்றுதான் பொருள்.

உள்ளுளே ஊறி நின்று வெளிப்படும் காதல் கவிதையைப் போன்றது. மனிதன் உள்ளவரை கவிதை இருக்கும். மனிதன் மறைந்த பிறகும் காதல் வாழும். காதலால்தான் உலகின் தோற்றமே. அதனால்தான் உயர் கவிஞர்களின் இடையே ஒரு பெரும் ஒற்றுமையைக் காணுகின்றோம். கருத்தொற்றுமை மட்டுமல்ல; முடிவின் ஒற்றுமையும் கூடத்தான்.

காதல் நோயாகும்; நெருங்கினால் அதுவே மருந்தாகும். அண்டத்தைக் கட்டியாளும் விந்தைப் பொருள் இந்தக் காதல். பெண் ஆண் உருவிலே வரும். பெண்ணை ஆணாகி வாட்டும்; ஆணைப் பெண்ணாகி வாட்டும். திருக்குறள் 1102 இதையே கூறும். நற்றிணை 80-ம் உடன் ஆமென்று சொல்லும். எனில் ஒற்றுமை கூடாது என்று சொல்ல முடியுமா?

காதல் வெளிப்படுவது கண்ணிலே. கண்ணே காதலின் செயலாளர். அதுவே வழி வகை வாயில் எல்லாம். காதலின் தத்துவம் கண்ணிற்கும் ஆகும். காதல்தானே நோயாய், தானே மருந்தாய் வருவதுபோல, அதன் அமைச்சாகிய கண்ணும் தானே நோயாய், தானே நோய் நீக்கும் மருந்தாய் வரும். இதைத் திருவெங்கைக் கோவை (குறிப்பறிதல்-5) "நோயுமந் நோய்க்கு மருந்துந் தராநிற்கு நூற்பகவிற் றேயு மருங்குற் பெருமலை மாதர் திருக்கண்களே" என்று சொல்லும். திருக்குறளும் இதை, "இரு நோக்கிவளுண் கண்ணுள்ளதொரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து" என்று கூறி விளக்கும்.

காதலால் தாக்குண்டார் நெருங்கினால் வாதை தணிவர். அகன்று சென்றால் தீத்துயரம் அடைவர். காதலே தீயாகின்றது இங்கு. நெருங்கினால் பனியின் குளிர்ச்சியைக் காட்டும்; நீங்கினால் தீயின் முழு வெம்மையைக் கூட்டும். இந்தத் தீயைவிட்டு நீங்க நீங்கத் துடிப்பர்; நெருங்க நெருங்க மகிழ்ச்சியில் மறப்பர். இதனால்தான் திருக்குறளோன் (1159) கேட்டான் - காமநோய்போல விடிற்சுடல் ஆற்றுமோ தீ? கம்பனும் இதையேதான் கேட்கிறான். அவனுக்காகச் சீதை கேட்கிறாள். (கம்ப. அயோ. நகர்நீங். 226.) பிரிவினும் சுடுமோ பெருங்காடு? வியத்தகும் பொருளொற்றுமை! அழகு!

காதலின் ஒருபடி வாழ்க்கைத் துவக்கம்; ஒருபடி மகப்பேறு; என்று இப்படியே போய்க்கொண்டிருக்கும். மகப்பேறும் அறிவமைந்ததாகஇருக்க வேண்டும். இல்லையேல்?

"உரிமை மைந்தரைப்
பெறுகின்ற துறுதுயர்
நீங்கி
இருமை யும்பெறற்
கென்பது பெரியவர்
இயற்கை"

என்று கூறி இராமனை முடிசூட்டிக் கொள்ள வேண்டுகிறான் தசரதன். பெரியவர் என்றது யாரை?

"இம்மையுலகத் திசையோடும்
விளங்கி
மறுமை யுலகமும்
மறுவின் றெய்துப
செறுநரும் விழையும்
செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த
செம்ம லோரெனப்
பல்லோர்" கூறிய பழமொழி

என்பது செல்லூர்க் கோசிகன் கண்ணனார் அகநானூற்றில் 66-ம் பாடலில் குறித்துள்ள வாசகம். நைடதமும்,

"செம்மைய வருமகப்
பெருத தீமையோர்க்கு
இம்மையும் மறுமையும்
இன்பம் இல்லையால்"

என்று சொல்கின்றது.

நற்பேறு என்பது நன்மக்கட் பேறு ஆகலாம்; ஆனால் அது அவ்வளவு எளிதில் அடைந்துவிடக்கூடிய ஒன்றல்ல என்பதையும் ஒருசேர உலகமே சொல்லுகின்றதே! விந்தையாயில்லை! முடியுமா, முடியாதா நன்மக்கட் பேறு? முடியும் ஆனால் எளிதல்ல. திருக்குறள் சொல்லும்:

"பெறுமவற்றுள் யாமறிவ
தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" (61)

இதனை மீதூர்ந்து வெல்லக்கூடியது பிறிதொன்றில்லை. புறம் 188-ம் இதையே கூறுகின்றது. "பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்றென்னுடையரேனும் உடையரோ மக்களையிங் கில்லாதவர்?" என்று நளவெண்பா நம்மை நோக்கிக் கேட்கின்றது.

(தொடரும்)

மதுரை மாவட்டத்தில்
அண்ணா
7-11-'59 மாலை 5 மணி— கோம்பை.
,, இரவு 8 மணி— தேனி.
8-11-'59 காலை—மதுரை- எழுத்தாளர் மன்றம்.
,, மாலை 5 மணி— மேலூர்.
,, இரவு 8 மணி— மதுரை-பொதுக் கூட்டம்.
9-11-'59 மாலை 4 மணி— மதுரை-அமெரிக்கன் கல்லூரி.
,, மாலை 6 மணி— அலங்காநல்லூர்.
,, இரவு 8 மணி— சோழவந்தான்.
11-11-'59 காலை—போடி- திருமணம்.

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குப்பிள்ளை, திண்டுக்கல்ரோடு, மதுரை.

முல்லை
நவம்பர் இதழ்
விற்பனையாகிறது.
★
விலை அணா 4.
முல்லை :: சென்னை-6.

கருநாடகத்தைப் பார்

''சீனாவைப் பார்! ரஷ்யாவைப் பார்! கேரளத்தைப் பார்!'' என்ற முழக்கங்களை ஒரு கட்சியிடமிருந்து கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டோம்; கேட்டு அலுத்ததோடு அவற்றைப் பார்த்தும் அலுத்துவிட்டோம். இப்போது தமிழகத்து அரசியல் கட்சிகளைப் பார்த்து, ''கருநாடகத்தைப் பார்!'' என்று கூறவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். பெங்களூர் நகரில் மட்டும் 24 கிளைக்கழகங்கள், 4300 உறுப்பினர்கள். சுற்றுவட்டாரங்களிலே 28 கிளைக்கழகங்கள். நான் கருநாடகத்தில் சில நாட்கள் தங்கினேன். இயக்கத்தோழர்களைத் தினமும் கண்டு அளவளாவும் பேறு பெற்றேன். கருநாடக மாநிலச் செயலாளர் தோழர் **எஸ். வி. பதி** அவர்கள், ஓய்வொழிவில்லாமல் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார். எங்கெங்கே இயக்க ஆர்வலர்கள்–ஆதரவாளர்கள் இருக்கின்றார்கள் என்பதைக் கண்டுபிடித்து, புதிய கிளைகள் நிறுவுவதில் பெரிதும் அக்கரை காட்டுகிறார். கன்னடத்தோழர்கள் ஏராளமாக இயக்கத்தில் சேர்ந்துள்ளனர். முன்னாள் முதலமைச்சர் **அனுமந்தையா** கழகத்தின் வளர்ச்சி கண்டு பெருமிதங் கொண்டு பேசினார். ஓய்வு பெற்ற உயர்நீதிபதி மேடப்பா, ''எப்படியாவது கருநாடகத்தில் கன்னடமொழியில் ஒரு நாளிதழ் வெளியிடுங்களேன்!'' என்றார். பெங்களூர் இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் (I. T. I.) தொழிற்சாலையில் ஒரு தமிழ் மன்றம் துவக்கினார்கள். நான அதைத் துவக்கி வைத்தேன்; தமிழ் பிறந்த கதை சொன்னேன்; தாம் பிறந்த கதை கேட்டுத் தொழிற்சாலையில் வதியும் நான்கு மொழி திராவிட மக்களும மகிழ்சசியுற்றனர். தொலைபேசித் தொழிற்சாலையில் திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் பேசியது அது முதலதடவை. தொழிற்சாலையின் பொதுததலைவர் திரு. **செனாய்** அவர்கள் தலைமை வகித்தார்கள். தூய சூசையப்பர் கல்லூரி (Saint Joseph College) பேராசிரியர் **தண். கி. வெங்கடாசலம்** அவர்கள் உடன் பேசினார்கள். திரு. செனாய் அவர்கள் குடகுப் பகுதியைச சார்ந்தவர்கள். திராவ்ட மொழியின் சிறு கிளை மொழியான கொங்கணி மொழி பேசுபவர். அதனால் ஒப்பியல் முறையில் திராவிடமொழிச் சொற்களை ஒப்பிட்டுப் பேசியதை, பலமாகக் கைதட்டி வரவேற்றார். இந்தத் தொழிற்சாலையின் பிற நிர்வாகிகள் அனைவரும் வடநாட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற்சாலையின் தலைமை பீடத்தில் இருப்பவர் துணைக்கண்டத் தலைவர் இராசேந்திர பிரசாத்தின் மருகர். தொழிற்சாலை ஒரு தனி நகரமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு மொழி பேசும் திராவிட மக்கள் அனைவரும் இங்கே பிரிக்கமுடியாதபடி இணைந்திருக்கிறார்கள்.

மறுநாள் பெங்களூர் தூய சூசையப்பர் கல்லூரியில் பேசினேன். பேராசிரியர் **தண். கி. வெங்கடாசலம்** அவர்கள் தலைமைவகித்தார்கள். மண்டபம் முழுவதிலும் மாணவர்கள் நிறைந்திருந்தார்கள். **நெஞ்சில் உரம் வேண்டும்** என்பதுபற்றிப் பேசினேன்.

அன்று இரவு மல்லேசுவரம் சேவாசதன மண்டபத்தில் நடைபெற்ற கன்னட நாடகம் ஒன்றுக்கும் தமிழ் நாடகம் ஒன்றுக்கும் தலைமை வகித்தேன். ''கல்கி''யின் புத்தகங்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் மாத்தூர் கிருட்ணமூர்த்தி என்ற சிறந்த எழுத்தாள நண்பர், அந்தக் கன்னட நாடகத்தைத் தானே எழுதி நடித்தார். நாடகமும் நன்றாயிருந்தது; கன்னட மக்களும் தமிழ் மக்களும் அந்தச் சங்கத்தில் பழகுகின்ற முறையும் நன்றாயிருந்தது.

அடுத்த நாள் நண்பர் எஸ். வி. பதியும், தோழர் கி. சோழனும் உடன் வர பெங்களூரிலிருந்து 164 வது மைலிலுள்ள **பத்ராவதியை** நோக்கிப் புறப்பட்டோம். வடநாட்டுக்குப் போனால் அங்கே மனிதர்கள் நம்மிலிருந்து மாறுபட்டுக் காணுவது போல், மரம் செடி கொடிகளும் மாறுபடுவதைக் காணுவோம். ஆனால்

கண்ணதாசன்

கருநாடகத்தின் எப்புறத்தும் தமிழ்ச் சாயலே தென்படுகிறது. கவிந்திருக்கும் மேகங்கள்; சில்லென்று வந்து மெய் தழுவும் தென்றல்; வழியெங்கணும் பச்சைப்பசேலென்று இருக்கும் சோலைகள்; சிறிய குன்றுகள்; பெரிய மலைகள்–இவை ஐம்புலனுக்கும் இன்பமளித்தன. வழி நெடுகிலும் களைப்புத் தெரியாமலே பயணம் தொடர்ந்தது. பெங்களூரிலிருந்து நூறாவது மைலில் உள்ள அரசிக்கரையில் (அரிசிக்கீர்) சுமார் இருநூற்றைம்பது திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இருக்கின்றார்கள். பெரியதோர் ஏரிக்கரையில் அமைந்துள்ள அந்த நகரத்தில், ஒரு படிப்பகத்தையும் நடத்தி வருகிறார்கள். இங்கிருப்பது போலவே, அங்கும் தமிழ் வைதீகர்களின் எதிர்ப்பு ஏராளம். ஒரு சிறு பெட்டிக் கடை வைத்திருக்கின்ற தோழர்தான், செயலாளர். அந்தப் படிப்பகத்தில் இறங்கினோம். தோழர்களைச் சந்தித்து அளவளாவிவிட்டு, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். பத்ராவதி நெருங்க நெருங்க, வெண்புகையும் கரும்புகையும் வான் நோக்கிப் பறக்கும் காட்சி தெரிந்தது. வெண்புகை வருவது காகிதத் தொழிற்சாலை என்றும் கரும்புகை கக்குவது இரும்புத் தொழிற்சாலை என்றும் தோழர் கி. சோழன் முன் கூட்டியே சொல்லி வைத்தார். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு பத்ராவதி நகரை அடைந்தோம். நகரின் எல்லையிலேயே, ஏராளமான தோழர்கள் நூற்றுக்கணக்கான கொடிகளுடன் காத்துக் கிடந்தார்கள். ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்ற முழக்கம் விண்ணதிர எழுந்தது. ஓர் உணவு விடுதியில் இறங்கி ஓய்வு பெற்றோம். ஒரு மணிக்கு, காகிதத் தொழிற்சாலையைக் காணப் புறப்பட்டோம். கண்டோம்; களித்தோம். பிறகு இரும்புத் தொழிற்சாலை சென்று, இரும்புருக்கும் எல்லாப் பகுதிகளையும் பார்த்தோம். இவை பற்றிய விவரங்களையும், பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் இரும்புத் தொழிற்சாலைகளைச் சொந்தப் பிள்ளைகளைப்போல் கொட்டிச் செலவழித்து வளர்க்கும் துணைக்கண்ட அரசு பத்ராவதியை அலட்சியப்படுத்தும் புள்ளி விவரங்களையும், தொழிலாளர் நிலைகளையும் - குறைகளையும், அங்கு திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கும் செல்வாக்கையும், அடுத்துவரும் கருநாடகச் சிறப்பிதழில் எழுதுகிறேன்.

உணவு விடுதியிலேயே, பிரசா சோசலிஸ்ட் கட்சி நண்பர்கள் ஒரு விருந்து நடத்திப் பங்கு கொண்டார்கள். ஐந்து மணிக்கு மிகப் பெரிய ஊர்வலம். அது ஆறு மணிக்கு இடம் வந்தடைந்து, கூட்டம் தொடங்கிற்று. தொடங்கிய உடனேயே மழை இருப்பினும் ஒருவர்கூட இடத்தை விட்டு அசையவே இல்லை. எட்டு மணிக்கெல்லாம் கூட்டம் முடிந்தது. பத்ராவதி நகராண்மைக் கழகம் கன்னட பி. சோ. தோழர்கள் கையிலே இருக்கிறது. மிகப் பெரிய தொழிற்சங்கத்தையும் அவர்களே தான் நடத்தி வருகிறார்கள். பொதுவுடைமைத் தோழர்கள் எவ்வகையிலும் அங்கே செல்வாக்குப் பெற முடியவில்லை. நமது பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் பத்ராவதி சென்றிருந்த காலை பி. சோ. தோழர்கள் நகராண்மைக் கழகத்தில் ஒரு மாபெரும் வரவேற்பு நடத்திப் பெருமையளித்தது குறிப்பிடத்தக்கது.

அன்று நானும் நகராண்மைக் கழகத்திலேயே சிறிது நேரம் தங்கினேன். அறிஞர் அண்ணா அவர்களின் வருகையை, பி. சோ. தோழர்கள் உட்பட எல்லோரும் பெரிதும் விரும்புகிறார்கள். இரவு பத்து மணிக்கு, திரும்பப் பெங்களூருக்குப் புறப்பட்டோம். அரசிக்கரைக்கு இரண்டாவது கல்லில் கார் நின்றுவிட்டது. அந்த அழகான நகரங்களை விட்டுவிட்டுத் திரும்ப மனமில்லாமல் நின்றுவிட்டதென்றே நான் கருதினேன். தோழர் எஸ். வி. பதி அவர்கள், காரோடு மூன்று மணிநேரம் போராடினார். அப்பொழுதும் அது அசைய மறுத்துவிட்டது. பிறகுவேறு வழியின்றி அரசிக்கரைக்குத் திரும்பி, புகைவண்டிமூலம் பெங்களூர் திரும்பி வந்து சேர்ந்தேன். மறுநாள் காரைக் கொண்டுவந்து சேர்த்தார் தோழர் பதி. கருநாடகச் சுற்றுப் பயணத்தில் எனக்கேற்பட்ட மகிழ்ச்சியைப்போல், எந்தப் பயணத்திலும் ஏற்பட்டதில்லை என்று கூறலாம். ★

வருந்துகிறோம்.

ஏழிசைமன்னர் எம். கே. தியாகராச பாகவதர் அவர்களின் மறைவைக் கேட்டு வருந்துகிறோம். அன்னார் குடும்பத்தார்க்கு நம் பரிவு உரித்தாகுக.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

இலங்கைத் தமிழர் தம் பழம் பெருமைகளுடன் பின் வந்த இடைக் காலச் சூழல்களையும். பழய இன உறவுகளுடன் இடை வந்த அரசியல் சூழ்நிலைகளையும் தக்கவாறு உணர்ந்து செயலாற்ற வேண்டும். குறுகிய காலத் திட்டங்களில் மக்கள் ஆற்றல் சிதறவிடாமல் தலைவர்கள் நீண்ட காலத் திட்டங்கள் வகுக்க வேண்டும். தமிழரிடையே பிளவுகள், உயர்வு தாழ்வுகள் களைவதுடன் தமிழ்மொழி மறுமலர்ச்சியுடன் தமிழின மறுமலர்ச்சிகளையும் தமிழ் சார்ந்த சிங்கள முதலிய தென்கிழக்காசிய இன மொழிகளின் மறுமலர்ச்சிகளையும் இணைத்தியக்குதல் வேண்டும்.

மலர்ச்சியுற்ற தமிழகம்- புது மலர்ச்சியுற்ற தென்கிழக்காசியா- கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு உயர்வு தாழ்வுகள்பற்றிய ஒரு சம நெறி முழு உலகு காண இலங்கைத் தமிழன் தானும் எழுந்து, உலகில் பிற தமிழரையும் தமிழினத்தவரையும் தமிழ் சூழினங்களையும் ஊக்கி ஓருலகப் பண்பைக் கீழ்திசையில் புதிய கதிரொளியாகப் பரப்புவானாக. அதற்குரிய கருவியாக, ஒப்பற்ற கலைக் கருவியாக முத்தமிழ் இயங்கும். அதன்மூலம் அவன் வரலாறு உலக வரலாற்றில் பொன்னேடுகளில் மணி யெழுத்துக்களால் பொறிக்கப்படுவதாக.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழினம்!
ஓங்குக ஈழப்பழம் பெருநாடு!

(முற்றும்)

மதுரை எழுத்தாளர் மன்றம்

இரண்டாவது ஆண்டு விழா.

நாள்: 8-11-59.
காலம்: காலை 8-30 மணி.
இடம்: மதுரை சந்திரா-திரைஅரங்கு.
தலைவர்: டாக்டர் மா. இராசமாணிக்கனார்.
திறப்பாளர்: டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.
பரிசு வழங்குபவர்: திருமதி தே. தியாகராசன்.
கவியரங்கத் தலைவர்: கண்ணதாசன்.
கவியரங்கில் பங்குகொள்வோர்: கதி. சுந்தரம், நாவுக்கரசன், முடியரசன், பனை. சண்முகம், க. தேசிகன்.
சிறப்புச் சொற்பொழிவாளர்: அறிஞர் அண்ணா.

அனைவரும் வருக!

விழாத் தொடக்கத்தில் மதுரை எம். பி. என். சேதுராமன்–பொன்னுசாமி சகோதரர் நாதசுர இசை விருந்து உண்டு.

"கண்" பெற்ற குறட்பாக்கள்

கண் பெற்ற குறள்களைக் குறித்தனுப்ப வேண்டும் என்ற போது தஞ்சை நண்பர் இரங்கையன் இப்படிக் கேட்டெழுதினார்:

தாங்கள், "தென்றல்" பத்திரிகையில் "கண்" பெற்ற குறள் எத்தனை என்ற வினாவினை மக்களைப் பார்த்து கேட்டு; அனுப்ப விரும்பி இருந்தீர்கள். இது, யாபேரும் "திருக்குறளை"ப் படிக்க வேண்டும் என்னும் எண்ணமாக இருக்கக் கூடுமென்று நம்புகின்றேன்; பத்திரிகையில் விபரம் இல்லாததால்.

ஆகையால், யானும் திருக்குறளில் "கண்" என்று வந்துள்ள அத்துணைக் குறள்களையும் எழுதி தட்டெழுத்தில்அச்சிட்டுஇதனுடன் இணைத்துள்ளேன்.

இன்னும், இதன் நோக்கம் யாது என்பதனை என்னால் அறிய முடியவில்லை.

தங்கள் பணியினைப் பாராட்டுகின்றேன்; நன்றி சொல்லுகின்றேன்."

குறளை உங்களில் பலர் ஒரு தடவைகூடப் படித்ததில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் படித்திருக்கிறீர்கள். உங்களையெல்லாம் ஒருமுறையாகிலும் 1330 குறள்களையும் படிக்க வைக்கவும், ஏற்கனவே படித்தவர்களை மறுமுறையும் படிக்க வைக்கவுமே, இந்த அறிவிப்பைத் தந்தோம். கண் பெற்ற குறள்களையெல்லாம் குறித்தனுப்புங்கள் என்றோம். பலர் "ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று தோழர் இரங்கையன் போல் கேட்டனர். அவர்களுக்கெல்லாம் இப்போது ஐயம் தீர்ந்திருக்கும். "ஒருவர் நான்கு முறை குறளைத் திரும்பத் திரும்பப் படித்தேன்!" என்று எழுதுகிறார். இன்னொருவர் எதற்குக் கேட்கிறீர்கள் என்று தெரியாவிடினும், ஒருமுறை குறளை நிதானமாகப் படித்து முடித்தேன் என்று வேறு எழுதுகிறார். ஆக, நாம் விடுத்த அறிக்கை நல்ல பலனைத் தந்திருக்கிறது.

சிலர், **கண்டு, புன்கணீர் கண்ணின்று, வன்கணவர், கண்டற்றால், கண்டனைய, கண்ணும், கண்ணீரன்றே** என்ற தொடர்களையும் இவைபோன்ற பிறவற்றையும் கணக்கில் சேர்த்து அக்குறள்களையும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். நாம் அவற்றைக் கணக்கில் கொள்ளவில்லை. சில குறள்களில் இரண்டு மூன்று கண்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆக அவற்றையெல்லாம் தனித்தனியே எண்ணாது அவை வந்த பாட்டையே கணக்கில் எடுத்து எண்ணியிருக்கிறோம்.

தோழர்கள் இப்போட்டியில் காட்டிய ஆர்வத்தைப் பார்த்து, இப்போட்டியை மேலும் தொடர நினைக்கிறோம். அடுத்தாற்போல் "ஆமை" பெற்ற குறள்களைக் குறித்தனுப்புக, 16-11-59-க்குள்ளாக. ஆனால் ஒன்று; சம்பந்தப்பட்ட குறள்கள் முழுவதையும் எழுத்து விடாமல் எழுதியனுப்பியிருக்கின்றனர். அதனால் காலம் வீணாவதோடு உங்கள் பணமும் அதிகப்படியாக தில்லி அரசுக்குப் போய்ச் சேர்கின்றதல்லவா. இனி எல்லாத் தோழர்களும் குறிப்பிட்ட குறளின் எண்ணை மட்டும் குறித்தனுப்புங்கள். அவை ஒரே அஞ்சலட்டைக்குள் அடங்கிவிடும். ஆமை பெற்ற குறள்களைக் குறித்தனுப்ப இறுதி நாள் 16-11-59.

கண்பெற்ற குறள்களைக் குறித்தனுப்பிய நண்பர்களின் பெயர்கள் கீழே உள்ளன:

மு கிருட்டிணசாமி-சென்னை-30, கோ. திருமாறன்-புதுவை, ஆ. இராமச்சந்திரன்-சென்னை-1, ஆர். கணேசன்-ஒவரூர், பா. கோவர்த்தனன்-மதுரை, து. அரங்கன்-கோவூர், இல. அருணாசலம் - கு. கள்ளையங்குப்பம், வீர. வேங்கடத்தான்-மேலைச்சிவபுரி, "சிவன்"-சென்னை-17, ப. கருப்பண்ணன்-கருவை, கோ. வெ. கண்ணன்-செஞ்சி, சி. சு. தேவராசன்-சிறுதையூர், எஸ். முத்தையா-திருச்சி, அர. இராசாராமன்-வளவனூர், கோ. இரங்கையன்-தஞ்சை, நல். பெரியசாமி-பெண்ணாடம், எஸ். சிவசுந்தரம்-இடையூர், கொ. முரசு-தாம்பரம், தில்லை செயராமன்-சின்னப்பேட்டை, சங். நடேசன்-ஆண்டிபட்டி, இரா. சண்முகசுந்தரம்-கத்தரிபுலம், இராம. கணேசன்-கல்லல், அ. பாலு-திருச்செங்கோடு, சு. வேதகிரி-கும்பகோணம், அ. சி. வடிவேலன் - அம்வநல்லூர், பிர. சொக்கலிங்கம் - தூத்துக்குடி. ஆ. வேங்கட நாராயணன்-திண்டுக்கல், ம. புல்லையா-நாரைக்கிணறு, சி. அருள்ராசு-சென்னை-6, ஆர். திருவேங்கடம்-இராமநாதபுரம், பாலமுனுசாமி-முதலியார்பேட்டை, வ. மு. கிருட்டிணன் - காவேரிப்பட்டினம், குவலயன்-குயப்பேட்டை, இரா. பன்னீர்ச்செல்வன்-குடந்தை, கமலதாசன்-தார்க்காடு, கு. செந்தமிழ்ச்செல்வன்-சென்னை-12, எஸ். சம்பந்தன்-சென்னை-12, நெல்லைக்கபிலன்-சென்னை-5, இரா. செகதீசன்-மாம்பலம், அரு. காளையப்பன்-காரைக்குடி, தி. த. இராதாகிருட்டினன்-சென்னை-6, சூ.ச. அன்பழகன்-திருவல்லிக்கேணி, ஏ. ஆர். சசசுரநாமம்-திருப்பத்தூர், மெ. மு. அபூபக்கர்-தாம்பரம், க. ச. கணேசன்-சென்னை, சார்சு-நெல்லை, மு. அ. முத்துராசன்-அயன்பாப்பாகுடி, கே. எஸ். மணி-புது வண்ணாரப்பேட்டை, வி. டி. சீனிவாசன்-இரியூர், வெ. குமரேசன்-சாணாங்குப்பம், இரா. சண்முகம்-சீராமபுரம், மீ. சுந்தரம் - செம்பியன்மாதேவி, ஆ. சி. பொன்னையா-ஆழ்வார்குறிச்சி, கா. பக்கிரிசாமி-தெற்குப் பொய்கைநல்லூர், சு. சுப்பையா-காந்திகிராமம் (கடலூர்), செ. த நாதன்-கண்டி, போ. ரா. சோமசுந்தரம்-கோவை, ஆர். பழனிசாமி-கும்பகோணம், துரை. மகாலிங்கன்-கடலூர், ப. ஆதவன்-தண்ணீர்ப்பள்ளி, வே கூத்தரசன்-கீழப்பெண்ணாத்தூர், ம. சந்தானம்-அரிமழம், புவனகிரி சு. தண்டபாணி-குறிஞ்சிப்பாடி, மா. ஆண்டமுத்து-குப்பாண்டம்பாளையம். ★

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், எ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு, தொலைபேசி எண் 83510.